لا اله الا الله محمد رسول الله

# நபி வழி

உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்





ஜூலை - 2011

# புனித ரமலான்

## திருக்குர்ஆனிலிருந்து....

"ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பெற்ற மாதமாகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக்கூடியதும், நேர்வழியை தெளிவாக்கக்கூடியதும் (நன்மை தீமையை) பிரித்தறிவிக்கக்கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தை காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ அல்லது பயணியாகவோ இருப்பவர், (விட்டுப்போன நோன்பை) மற்ற நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ளவும்."

***(திருக்குர்ஆன் 2:186)***

"நிச்சயமாக நாம் இ(ந்)த (க் குர்ஆ)னை தீர்ப்பிற்குரிய இரவில் இறக்கினோம் தீர்ப்பிற்குரிய இரவு என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது? தீர்ப்பிற்குரிய இரவு, ஆயிரம் மாதங்களை விட மிகச்சிறந்ததாகும். அதில் வானவர்களும் இந்த ஆன்மாவும் (ஆன்மீகமும், பௌதீகமுமான) அனைத்து விவகாரங்கள் தொடர்பாக தங்கள் இறைவனின் கட்டளையுடன் இறங்குகின்றனர். விடியற்காலை தோன்றும் வரை. (அது முற்றிலும்) சாந்தியானதாகவே இருக்கும்."

***(திருக்குர்ஆன் 97:2-6)***

## நபிமொழியிலிருந்து....

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ரமலான் மாதத்தில் எனது சமுதாயத்திற்கு, இதற்கு முன்னுள்ள எந்த சமுதாயத்திற்கும் வழங்கப்படாத ஐந்து சிறப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

1. நோன்பாளிகளின் வாயின் வாடை கஸ்தூரியை விட அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமானது.
2. அவர்களுக்காக வானவர்கள் பாவமன்னிப்புத் தேடிக் கொண்டிருக்கின்றனர் - அவர்கள் நோன்பு திறக்கும் வரை
3. அவர்களுக்காக நாள்தோறும் சுவர்க்கம் அலங்கரிக்கப்படுகிறது.
4. வரம்பு மீறிய ஷய்த்தான்கள் பிணைக்கப்படுகின்றனர்.
5. அல்லாஹ் அவர்கள் அனைவரையும் ரமலானின் கடைசி இரவில் மன்னித்து விடுகிறான்.

***(கன்ஸுல் உம்மால் - கிதாபுஸ்ஸவ்ம்)***

ரமலான் மாதத்தில் செய்த நன்மைகள், இறைவணக்கங்கள் வானத்திற்கும், பூமிக்கும் இடையில் நிற்கின்றன. சதகத்துல் ஃபித்ர் தான் அவற்றை வானத்திற்கு உயர்த்துகின்றது என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ***(கன்ஸுல் உம்மால் - கிதாபுஸ்ஸவ்ம்)***

எவர் இரு பெருநாள்களின் இரவுகளில் இறைவணக்கத்தில் ஈடுபடுகின்றாரோ அவருடைய உள்ளம் நிரந்தரமாக உயிரூட்டப்படும். முழு உலகமக்களின் உள்ளங்கள் மரணித்துப்போனாலும் அவருடைய உள்ளம் மரணமடையாது என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***(இப்னு மாஜா)***

## இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூலிலிருந்து....

"அல்லாஹ் விரும்பியிருந்தால், மற்ற சமுதாயங்களைப் போன்று இந்த சமுதாயத்திற்கும் எந்தவொரு நிபந்தனையும் வைக்காமல் இருந்திருப்பான். ஆனால் அவன் இதில் நன்மைக்காக

**தொடர்ச்சி 23-ம் பக்கம்...**

# கிலாஃபத்திற்காக ஏங்கும் முஸ்லிம் சமுதாயமே!

T. J. முனவ்வர் இப்ராஹீம்

நடந்து முடிந்த சட்ட மன்ற தேர்தலில் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளிவந்து கொன்டிருந்த 13-05-2011 அன்று ஜெயா தொலைக்காட்சியில் ஒளிபரப்பட்ட ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மனித நேய மக்கள் கட்சி சார்பில் கலந்துகொண்ட ஜனாப் ஹைதர் அலி சாஹிபிடம் உலகலாவிய நிலையில் முஸ்லிம்களின் நிலை மிக பலவீனமாக உள்ளதே என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் இதோ:

“நீங்கள் கூறியது உண்மைதான். முஸ்லிம்களின் நிலை பலவீனமாகத்தான் உள்ளது. அதற்குக் காரணம் எங்களிடம் உலகளாவிய அளவில் கலீஃபா இல்லாததுதான்.”

பதிலின் தொடர்ச்சியாக அவர் அடுத்து கூறிய விஷயம்தான் கவனிக்கத்தக்கதும் வேடிக்கை நிறைந்ததுமாகும். அவர் கூறியது:

“கிலாஃபத்தை ஏற்படுத்தும் முயற்சியாக இன்று தமிழகத்தில் எங்கள் அமைப்பு ஒரு நெட்வர்க்கை ஏற்படுத்தியது போன்று இந்தியா முழுவதும் ஏற்படுத்த முயற்சிப்போம். பின்னர் உலகலாவிய முறையில் இந்த நெட்வர்க் ஏற்பட முயற்சிப்போம்.”

கிலாஃபத்தை குறித்து இவர் மட்டுமல்ல பல அமைப்புகளும் இப்படித்தான் புரியாமல் பேசிக் கொண்டிருக்கின்றன.

மவ்லவி ஷம்ஸுத்தீன் காஸிமியோ அமைப்புகள் பல இருந்தாலும் நம் அனைவருக்கும் பொதுவாக ஒரு நபரை கலீஃபாவாக நாம் **தேர்ந்தெடுக்க வேண்டும்** என்கிறார். ஒரு சிலரோ கலீஃபா என்பது ஆட்சியாளரைத்தான் குறிக்கும் என்கின்றனர். விரக்தியின் விளிம்பிற்கே சென்றுவிட்ட வேறு சிலரோ ஒருவரை எதிப்பார்ப்பதை விட தஃவா (இறை அழைப்புப்பணி) இயக்கத்தின் மூலமோ அல்லது மார்க்க ரீதியான பண்பாட்டுப் பயிற்சி வழங்கும் ஓர் அமைப்பின் மூலமாகவோ அல்லது போராட்ட அணியின் மூலமாகவோ மார்க்கத்தை புதுப்பிக்கலாம் என்று வாதிடுகின்றனர். அது பற்றி புத்தகமே எழுதியுள்ளனர். அவ்வாறு புத்தகம் எழுதுபவர்கள் கலீஃபா என்னென்ன தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என தாமாகவே சுயமாக பல விஷயங்களைப் பட்டியலிட்டுக் குறிப்பிட்டிருப்பதுதான் மிகப் பெரிய வேடிக்கை!

மேலும் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு ஒரே தீர்வு கலீஃபாதான் என்ற கருத்தைக் குறிப்பிட்ட இன்னொரு நூலாசிரியரோ, வரக் கூடிய மஹ்தியும் ஒரு கலீஃபாதான். எனினும் அவர் வஹீ மூலமாக எந்த இறை செய்தியையும் பெற மாட்டார். எனவே அவர் முஸ்லிம் சமுதாயத்திலிருந்துதான் இஸ்லாத்தைக் கற்றறிய முடியும். ஆகவே மஹ்தி என்னும் கலீஃபா வரும் வரை காத்திராமல் அதற்கு முன்னரே கிலாஃபத்தை ஏற்படுத்துவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் என்று எழுதித் தள்ளியுள்ளார். மேலும் இப்புத்தகத்தின் மற்றொரு பக்கத்தில் அவர் இவ்வாறு எழுதுகிறார்:

“மூன்று நாட்களுக்கு மேல் கலீஃபா ஒருவர் இல்லாமல் இருப்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் பாவமான காரியமாகும். ஆகவே கிலாஃபத்தை ஏற்படுத்துவது நம் சக்திக்கு அப்பாற்றபட்டதென்றாலும் நமக்கு வெற்றி கிடைக்காவிட்டாலும், தொடர்ந்து முயற்சி செய்து கொண்டு இருந்தாலே போதும்; நம் பாவச் சுமை நீங்கிவிடும்.”

இவர்கள் அனைவரின் கூற்றை கவனித்தால் கிலாஃபத்தின் தேவையையும் அவசியத்தையும் இவர்களில் எவரும் மறுக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் கலீஃபாவை நாமே உருவாக்கிவிடலாம் என அவர்கள் எழுதியிருப்பது அவர்களின் அறியாமையைக் குறிப்பிடுகிறது. கலீஃபாவை உருவாக்குவது அல்லாஹ்தான் என்ற இறை வசனத்தை(24:56) இவர்கள் மறுக்கின்றனர்

என்பதையும் சாதாரண முஸ்லிமும் புரிந்து கொள்ளலாம்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:** "அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாக வாக்குறுதியளித்துள்ளான்." *(24:56)*

மேற்கூறப்பட்ட திருவசனத்தில் அல்லாஹ் கிலாஃபத்தை தாமே ஏற்படுத்துவதாகவும் (மனிதக்கரத்தால் அல்ல) அதற்கு நிபந்தனையாக மக்களிடம் அல்லாஹ் எதிர் பார்ப்பது ஒன்று அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாகவும் இரண்டாவது நற்செயலாற்றுவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதுதான் என மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றான்.

மக்கள் என்னதான் முயற்சி செய்தாலும் ஏன் கியாமத் வரை முயற்சி செய்து கொண்டே இருந்தாலும் தலைகீழாக நின்றாலும் ஆட்சி அதிகாரங்களை பயன்படுத்திப் பார்த்தாலும், செல்வங்களை வாரி இறைத்தாலும் மூச்சுமுட்ட பேசினாலும் பக்கம் பக்கமாக புத்தகங்களை எழுதினாலும் அவர்களின் முயற்சிகள் அனைத்தும் வீண்போய்விடும். ஏற்கனவே ஏற்பட்டது போன்று தோல்விதான் மிஞ்சும். காரணம் கிலாஃபத் அமைவது நம்பிக்கையாளர்கள் மற்றும் நற்செயல் புரிபவர்கள் மத்தியில்தான். மேலும் அதை ஏற்படுத்தும் பொறுப்பு இறைவனுடையது. மனித முயற்சியால் கிலாஃபத்தை ஒரு போதும் உருவாக்கிவிட முடியாது என்பதே திருமறை கூறும் உண்மை. அதுமட்டுமல்ல கிலாஃபத் ஏற்படும் காலத்தையும் அதன் தகுதியையும் மிகத்தெளிவாக ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ளார்கள். ஹதீஸில் வருகிறது:

அல்லாஹ் நாடிய காலம் வரை நுபுவ்வத் உங்கள் மத்தியில் நீடித்திருக்கும். பிறகு அவன் நாடுகின்றபோது அதனை எடுத்துக்கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் இருக்கும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு கொடுங்கோல் ஆட்சி இருக்கும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு பலவந்தமான ஆட்சி ஏற்படும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பின்னர் நுபுவ்வத் வழியில் கிலாஃபத் இருக்கும்." *(முஸ்னது அஹ்மது தொகுதி 4 பக்கம் 404)*

மேற்கூறப்பட்ட திருமறை மற்றும் ஹதீஸின் ஒளியில் நாம் தெரிந்துகொள்வது, கிலாஃபத் ஏற்பட வேண்டுமென்றால்,

✸ நுபுவ்வத் தேவை, அதாவது நபி தோன்றாமல் கிலாஃபத் தோன்ற முடியாது.

✸ கிலாஃபத்தை இறைவனால் மட்டுமே ஏற்படுத்த முடியும்

கிலாஃபத்தின் தோற்றம் குறித்து இவ்வளவு தெளிவாக அல்லாஹ் மற்றும் தூதர் (ஸல்) அவர்களின் வாக்குறுதியும் முன்னறிவிப்பும் இருந்தும் தங்களின் மனம்போன போக்கில் வாய்க்கு வந்ததை எல்லாம் கூறி மக்களை குழப்புகின்றனர் பல அமைப்புகளை சார்ந்தவர்கள்.

இவர்களை பற்றி தான் திருக்குர்ஆன் கண் இருந்தும் குருடர்கள் என்று கூறிகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. காரணம் கிலாஃபத்தை உருவாக்க இவர்களது முன்னோர்களின் முயற்சிகள் பலனற்று தோல்வியடைந்ததை கண்டும் இவர்களுக்கு அறிவு வரவில்லை.

உலகளாவிய அளவில் கிலாஃபத்தை ஏற்படுத்த இஸ்லாமிய மன்னர்கள், ஆட்சியாளர்கள், ஆலிம் பெருமக்கள், மக்கள் சக்தி, செல்வபலம், அதிகார பலம் அனைத்தும் கரம் கோர்த்து எடுத்த முயற்சி அனைத்திற்கும் இன்றுவரை பலன் என்ன கண்டார்கள் ?

மாறாக உலக அளவில் உள்ளதை இழந்தார்கள்; வாழ்க்கை தரத்தை இழந்தார்கள்; ஒற்றுமையை இழந்தார்கள்; வேற்றுமைக்கு உழைத்தார்கள் சுயநலத்தை முன்னிறுத்த போராடுகிறார்கள்; முஸ்லிம்களை கொன்று குவிக்கும் தஜ்ஜாலுக்கு இவர்களே உதவினார்கள்; வறுமையில் வாடும்

முஸ்லிம்களின் எண்ணிக்கையை, வேலை வாய்ப்பற்ற இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கினார்கள்; அரபு நாடுகளை உலகின் உல்லாச புரியாக மாற்றினார்கள்; பிரிவுகள் பலவாக்கி பலவீனப்பட்டு திண்டாடுகிறார்கள். முஸ்லிம்கள் தங்களின் நாடுகளில் நசுக்கப்படும் போது, அழிக்கப்படும் போது, அவர்களுக்காக ஆதரவுக் குரல் கொடுக்கக் கூட சக்தியற்றவர்களாய் நடுங்குகின்றனர். உலகில் வேறு எந்த மக்களும் சந்திக்காத அழிவையும், அவலநிலையையும் ஜிஹாது என்ற பெயரில் முஸ்லிம்கள் சந்தித்து வருகின்றனர். தஜ்ஜாலின் அடிமைகளாயிருக்கின்றனர். பொருளாதாரத்தில் நலிந்து போயிருக்கின் றனர். மொத்தத்தில் வாழ்வாதாரத்தை இழந்து நிர்கதியடைந்தவர் களாய் இருக்கின்றனர்.

இதனை இவர்களே தங்களது புத்தகத்தில் இவ்வாறு எழுதுகிறார்கள்:

“முஸ்லிம்கள் எண்ணற்ற பிரச்சனைகளை எதிர்நோக்கியிருக்கின்றனர். அவமானப் படுத்தப்படுகின்றனர். பின்னர் அழிக்கப் படுகின்றனர்.”

இதே நிலை தான் இன்று இந்தியாவிலும், போஸ்னியாவிலும், கோஸாவாவிலும், அல்பேனியாவிலும், இலங்கையிலும் இருக்கின்றது. இன்னும் பாலஸ்தீனத்திலோ முஸ்லிம்கள் அநாதைகளாகியிருக்கின்றனர்.

அபுல் ஃபராஜ் என்பவர் இவ்வாறு எழுதுகிறார்:

“கிலாஃபத்தை அழித்த காலனித்துவ சக்திகளின் கைப்பாவையான ஆட்சியாளர்கள் எண்ணெய் வளம் முழுவதையும் முஸ்லிம் களின் எதிரிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததோடு அவர்களின் கால்களில் மண்டியிடும் அவலத்தையும் ஏற்படுத்தி னார்கள். மேலும் IMF, World bank போன்ற நிறுவனங்களில் கையேந்தும் நிலைக்கு முஸ்லிம் உலகை இட்டுச் சென்றார்கள்.”

பொருளாதார தடையின் மூலமாக ஈராக்கில் லட்சக்கணக்கான குழந்தைகள் இறந்த போதும் இவ்வுலகம் பாராமுகமாக இருந்தது. எதிரிகளுக்கு முஸ்லிம்கள் எளிதில் இரையாவதை உணர முடிகிறது.

ஈராக், சோமாலியா, ஆப்கானிஸ்தான், செசன்யா, காஷ்மீர், குஜராத் போன்ற இடங்களில் பிரச்சனை அதிகமாகிக் கொண்டே செல்கிறது. பாதுகாப்பற்ற நிலையிலேயே முஸ்லிம்கள் உள்ளனர்.

“இன்று இஸ்லாம் வாழ்வியலிலிருந்து பிரிக்கப்பட்டு மஸ்ஜிதுகளில் மட்டும் முடங்கி போயிருக்கின்றது.”

இவையனைத்திலிருந்தும் மீட்க ஒரே தீர்வு கிலாஃபத்தை நிலைநிறுத்துவதேயாகும் என்று எழுதுகின்றனர். சுருங்கக்கூறின் முஸ்லிம்கள் பாதாள வீழ்ச்சிக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட பின்னரும் இறைவனின் வாக்குறுதிப்படி இக்காலத்தில் மாநபி (ஸல்) அவர்களின் உம்மத்தி நபியாக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அலை) அவர்கள் தோன்றி இஸ்லாத்தின் வெற்றிப் பாதைக்கு வித்திட்டு அன்னாரின் மறைவைத் தொடர்ந்து பூத்த கிலாஃபத் என்னும் அழகிய மலர் தமது நறுமணத்தை உலகின் எல்லா திசைகளிலும் பரப்பி தொடர்ந்து 105 ஆண்டுகளாக 200 நாடுகளில் பரவி 20 கோடிக்கும் மேலான நன் மக்களை தன்னதத்தே ஈர்த்துள்ளதை கண்டும் காணாததுபோல் உள்ளனர். பாமர மக்களிடம் சென்றடைய விடாமல் ஆலிம்கள் தடுக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். இருந்த போதிலும் அல்லாஹ் தம்மால் ஏற்படுத்தப்பட்ட தமது கிலாஃபத்தின் கிளைகளை பரவவிடாமல் இருக்க மாட்டான். அதன் இலக்கை அடைய விடாமல் இருக்கமாட்டான். அதனை உருவாக்கியவன் இறைவன் என்பதால் அதன் பாதுகாவலனும் அவனே தான். ஆகவேதான் அஹ்மதிய்யா கிலாஃபத்தோடு மோதிய ஆட்சியாளர்கள் அதே வேகத்தில் காணாமற் போயினர். அவர்களின் சதித்திட்டங்கள் சுக்கு நூறாயின. குழப்பங்கள் அவர்கள் பக்கமே திருப்பி அனுப்பப்பட்டன. மூட்டிய கலகத்தில் அவர்களே புதைந்தனர். கொளுத்திய தீயில் அவர்களே கருகினர். வரலாற்றின் ஜாம்பவான்கள் (அரபு மன்னர் பைசல்,

இடிஅமீன், பூட்டோ, ஜியாவுல் ஹக் போன்றோர்) தூக்கி எறியப்பட்டார்கள். அழிவையும் இழிவையும் பரிசாக பெற்றார்கள். பூமியிலிருந்து இந்த கிலாஃபத்தை துடைத்து எறிந்து விட வேண்டும் என்று மனப்பால் குடித்து திட்டம் தீட்டியவர்கள் தூள்தூளாயினர்.

அதே நேரத்தில் இறைவனால் உருவாக்கப்பட்ட அஹ்மதிய்யா கிலாஃபத் தமது நூற்றாண்டை உலகளவில் கொண்டாடியது. தற்போதைய இமாமான 5வது கலீஃபாவின் கீழ் எடுத்துக் கொண்ட உறுதிமொழியின் ஒரு பகுதி "ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரை உலகின் எல்லைகள் வரை எட்ட வைப்பதற்காக இறுதி மூச்சு வரை முயற்சி செய்வோம் என்றும், மாநபி (ஸல்) அவர்களின் கொடியை உலகின் எல்லா கொடிகளை விட உயரமாக பறப்பதற்காக நாங்கள் மட்டுமல்ல; எங்கள் சந்ததிகளுக்கும் சந்ததிகளின் சந்ததிகளுக்கும் அறிவுரை கூறிக் கொண்டிருப்போம்" என்பதாகும்.

ஆகவே மாநபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தையும், மாண்பையும், உயர்வையும், இஸ்லாத்தின் உயரிய குறிக்கோளையும் உலகில் பறைசாற்றி அவற்றை நடை முறைப்படுத்தி வாழும் ஒரு ஜமாஅத், அஹ்மதிய்யா ஜமாஅத் கிலாஃபத்தின் கீழ் செயல்படுவதை கண்டும் பாடம் படிக்காத இவர்கள் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் யூதர்களின் கைக்கூலி என்னும் பழைய பல்லவியை பாடப்போகிறார்களோ!! முஸ்லிம் சமுதாயமே மேலும் மேலும் பலவீனப்பட்டு அழிவை நோக்கி பயணிப்பவர்களே உங்களிடம் சில கேள்விகள்:

✱ பல ஆண்டுகளாக இறைவனிடம் நீங்கள் மன்றாடியும் கிலாஃபத்தை பற்றி இறை வாக்குறுதி இருந்தும் உங்களிடம் அது ஏற்படாதது ஏன்?

✱ மாநபி சொன்ன காலம் வந்துவிட்டது. கிலாஃபத் உங்களிடம் இல்லையே ஏன்? மாநபியின் முன்னறிவிப்பு பொய்த்து போகுமா?

✱ உங்களின் அழுகையையும் கோரிக்கையையும் இறைவன் ஏற்காதது ஏன்?

✱ நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றும் மக்கள் உங்களிடம் இல்லையா?

✱ உங்களின் கூட்டு முயற்சிகள் சிதறுண்டு போனது ஏன்?

✱ கிலாபத்தை ஏற்படுத்துவது இறைவனின் பணியாக இருக்கும் போது உங்கள் மத்தியில் ஏற்படாத கிலாஃபத் உங்கள் மூடத்தன மையான கருத்துப்படி யூத சக்திகளால் ? மட்டும் தங்கு தடையின்றி 105 ஆண்டுக்கும் மேலாக ஏற்படுத்த முடிந்ததாக கூறுகின்றீர்களா?

✱ அவ்வாறாயின் இறைவனின் வல்லமையை விட யூத சக்தி வல்லமை மிகுந்ததாக நம்புகிறீர்களா? நவூதுபில்லாஹ்.

✱ இதிலிருந்து அல்லாஹ்வின் வல்லமையை மறுப்பவர்கள் நீங்களா ? அல்லது நாங்களா ?

✱ மறைமுகமாக யூத சக்திகளுக்கு இறைதன்மையை கொடுப்பது நீங்களா அல்லது நாங்களா ?

காதியானிகளை எதிர்ப்பதாக கூறி இறை வல்லமைக்கு களங்கம் ஏற்படுத்தாதீர்கள். ரஹ்மானும் ரஹீமுமாகிய இறைவனால் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பான அஹ்மதிய்யா கிலாஃபத் உங்கள் முன்னால் காணப்படும் ஒப்பற்ற உண்மையும் சத்தியமுமாகும். இதில் பங்கேற்பதில் தான் இஸ்லாத்தின் கம்பீரமும் முஸ்லிம்களின் கண்ணியமும், மரியாதையும், வாழ்வும், உயர்வும் பாதுகாப்பும் உள்ளது என்பதை உணரும் உள்ளத்தை அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக. மீண்டும் மாநபி (ஸல்) கொண்டு வந்த அதே தூய இஸ்லாத்தை உலகில் அஹ்மதிய்யா கிலாஃபத் மூலமாக பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கும் நந்தவனத்தில் பிரவேசிப் பீர்களாக.

உங்கள் வீண் முயற்சிகளை கைவிட்டு இறைவல்லமைக்கு கட்டுப்படும் நல் இயல்பை அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக ஆமீன்.

தொடர்: 9

# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

**மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி)**

அத்தியாயம் - 6

**தந்தையின் மரணத்திற்குப் பின்**

மிர்ஸா குலாம் முர்தஸா தமது சொந்தப் பணத்தைச் செலவழித்து வழக்கு நடத்தி காதியான் மீதும் அதைச் சுற்றியிருந்த சில கிராமங்களின் மீதும் தமக்குள்ள சொத்துரிமையை நிலைநாட்டினார். ஆனால் அவருடய கணக்கரின் தவறு காரணமாக அன்னாருடைய பங்காளியின் பெயர்களும் அரசுப் பதிவேடுகளில் உரிமையாளர்களாக இடம் பெற்றுவிட்டன. அந்தச் சொத்தை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை இல்லாத காரணத்தால், அவர்கள் மிர்ஸா குலாம் முர்தஸாவிடம் வழக்கில் அவர் வெற்றி பெற்றால் அந்தச் சொத்து முழுவதும் அவருக்கே உரியது; தாங்கள் அதில் உரிமை கோரமாட்டோம் என்று தெளிவாகக் கூறி இருந்தார்கள்.எனவே மிர்ஸா குலாம் முர்தஸா உயிரோடு இருந்தவரை அவரிடம் சொத்துக்கு உரிமை கோரும் துணிச்சல் யாருக்கும் வரவில்லை. ஆனால் அவரது இறப்புக்குப் பின் மிர்ஸா இமாம் தீன் என்பவரின் தூண்டுதலின் பேரில் சொத்துக்கு உரிமை கோரி மிர்ஸா குலாம் காதிர் மீதும்,ஹஸ்ரத் அஹ்மது(அலை) அவர்கள் மீதும் வழக்குத் தொடர்ந்தனர்.

அந்த வழக்கில் தமது வெற்றிக்காக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் துஆச் செய்தார்கள். அவர்களின் சொந்தக்காரர்கள் தொடர்பான பிரார்த்தனைகள் தவிர மற்ற பிரார்த்தனைகளை இறைவன் ஒப்புக் கொள்வான் என்று அவர்களுக்கு இறைவெளிப்பாடு அருளப்பட்டது. எனவே ஹஸ்ரத் அஹ்மது(அலை)அவர்கள் தமது சொந்தக்காரர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி இறையறிவிப்பின் மூலம் தமக்குக் கிடைத்த இறைவிருப்பத்தை தெரிவித்தார்கள். தமது சகோதரரிடமும் வழக்கைத் தொடர்ந்து நடத்தவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் மிர்ஸா குலாம் காதிர் தம்முடைய வெற்றியில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்ததால்,ஹஸ்ரத் அஹ்மது(அலை) அவர்களின் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஏற்கனவே அதிகமான பணம் செலவழிக்கப்பட்டுவிட்டது. ஹஸ்ரத் அஹ்மது(அலை) முன்னரே இந்த ஆலோசனையைக் கூறியிருந்தால் வழக்கை அப்படியே நிறுத்தி இருக்கலாம் என்று அவர் சமாதானம் கூறினார். முதல் நீதிமன்றத்தில் தீர்ப்பு அவருக்குச் சாதகமாக அமைந்தது. ஆனால் தலைமை நீதிபதியின் தீர்ப்பு அவருக்கு எதிராக அமைந்தது. வழக்கின் செலவுத் தொகையையும் அவர் செலுத்த வேண்டியிருந்தது. அது அவருக்கு மிகப் பெரும் அதிர்ச்சியாகவும் ஏமாற்றமாகவும் அமைந்தது. உண்மையில் மிர்ஸா தஸத்தக் ஜீலானி, மிர்ஸா குலாம் கவ்ஸ் ஆகியோரின் வாரிசுதாரர்கள் சொத்தில் தங்களுக்குள்ள பங்கை லாஹூரைச் சேர்ந்த மிர்ஸாஆஸம் பேக் என்பவருக்கு விற்றிருந்தனர். அவர்தான் வழக்கின் செலவுத் தொகையைக் கவனித்து வந்தார். எனவே மிர்ஸா ஆஸம் பேக்கை வழக்கின் நடவடிக்கையிலிருந்து அகற்றுவதே சரியான நடைமுறையாக இருக்கும் என்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கருதினார்கள். ஆனால் அவர்களது சகோதரர் அந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. விளைவு அவர்களுக்கு ஏராளமான பொருட்செலவு ஏற்பட்டது. முடிவில் சொத்தையும் இழந்தார். ஆனால் அந்தச் சொத்துக்களின் அனுபவத்தை தம் ஆயுட்காலம் முழுவதும் தம் வசமே வைத்திருந்தார். அவருடைய மரணத்திற்கு பிறகு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாம் தம் மகன் சுல்தான் அஹ்மது மூலம்

சொத்துக்களை நீதிமன்ற தீர்ப்புப்படி சேரவேண்டியவர்களிடம் ஒப்படைக்கும் படிக் கூறினார்கள்.

**மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி)**

மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) நீர்வழித் துறையில் ஓர் அரசு ஊழியராகப் பணியாற்றி வந்தார். அவர் டெல்லியைச் சேர்ந்த மிகப் புகழ்பெற்ற செய்யிது குடும்பத்தைச் சேர்ந்தவராவார். மிகப் புகழ்பெற்ற இறைஞானியான காஜா மீர் தர்து அவர்களின் மகள் வழித்தோன்றலாவார். இந்தக் குடும்பத்தினரின் கண்ணியத்தைப் போற்றும் வகையில் முகலாயப் பேரரசர்கள் ஒரு பெரிய ஜாகீரை (நிலபகுதியை) இந்தக் குடும்பத்தினருக்கு பரிசாக அளித்தார்கள். அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களான லுஹரு போன்றவர்கள் தங்கள் பெண்மக்களை இந்தக்குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தனர். காஜா மீர் தர்து அவர்கள் தம் மகளை இந்தக் குடும்பத்தை சேர்ந்த ஒருவருக்கு மணமுடித்தார்கள் என்பதிலிருந்தே இந்தக் குடும்பத்தின் பெருமையை அறிந்து கொள்ளலாம்.

மீர் நாஸிர் நவாப் சாஹிப் 1866 ஆம் ஆண்டு நீர் வழித்துறையில் பணியாளராக சேர்ந்தார்கள். காதியானுக்கு மேற்குப் பகுதியில் ஓடும் ஒரு கால்வாய் பணிக்காக அவர் காதியானுக்கு அருகில் பணி செய்ய நேர்ந்தது. அக்காலத்தில் மிர்ஸா குலாம் காதிரும் அதே கால்வாயில் பணியாற்றியதால் அவருக்கும் மீர் நாஸிர் சாஹிப் (ரலி) அவர்களுக்கும் பழக்கம் ஏற்பட்டது. மீர் சாஹிபின் துணைவியாருக்கு ஒரு முறை உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அப்போது காதியானில் அனுபவமிக்க மருத்துவராக இருந்த தனது தந்தையாரிடம் மருத்துவத்திற்கான ஆலோசனை கேட்கும் படி மீர் சாஹிபிடம் மிர்ஸா குலாம் காதிர் கூறினார். அதன் படி மீர் ஸாஹிப் தம் மனைவியை காதியானுக்கு அழைத்து வந்து மிர்ஸா சாஹிபிடம் காட்டினார்கள். அப்போது மிர்ஸா சாஹிப் அவரது நோய்க்கான மருந்துகளை பரிந்துரைத்தார். தாம் மருத்துவம் கற்பதற்காக டெல்லி சென்ற விபரங்களையும் அவரோடு பகிர்ந்து கொண்டார்.

மீர் நாஸிர் சாஹிபின் முயற்சியால் அப்போது வாய்க்கால் பணியின் காண்ட்ராக்டராக இருந்தவரின் உதவியாளரான பன்ஸி தார் என்னும் சத்யாலி வகுப்பை சேர்ந்த இந்து இஸ்லாத்தை தழுவினார். அவருக்கு அப்துல் ஹக் என்னும் இஸ்லாமிய பெயர் சூட்டப்பட்டது. இந்த செய்தி 25.10.1874 ஆம் தேதியிட்ட மன்ஸூரே முஹம்மதி பாகம் 3 எண் 24ல் மிர்ஸா சுல்தான் அஹ்மது எழுதியுள்ள குறிப்பில் காணப்படுகிறது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது இல்லத்தின் தரை தளத்திலுள்ள ஒரு சிறிய அறையில் திருக்குர்ஆன் ஓதிக்கொண்டிருந்த போது மீர் சாஹிபும் அவரது துணைவியாரும் அன்னாரை முதன் முறையாகப் பார்த்தார்கள். தாங்கள் காதியானுக்கு மேற்கொண்ட அந்த சிறியப் பயணத்தின் முக்கியதுவத்தை அப்போது அவர்கள் முற்றிலுமாக உணர்ந்திருக்க வில்லை. ஒரு மருத்துவரை சந்திப்பதற்காக அங்கே சென்றார்கள். அவ்வேலை முடிந்ததும் திரும்பி சென்று விட்டனர். ஆனால் இந்த தொடர்பு அந்த புகழ் பெற்ற இரு குடும்பங்களுக்கிடையே ஏற்படப்போகும் மிக நெருக்கமான உறவுக்கு வித்தாக அமைந்தது. அன்று அவர்கள் தாம் காண வந்த மருத்துவரின் மகனை பார்த்தபார்வை தம் எதிர்கால மருமகனை பார்த்த பார்வையாக அமைந்தது.

மிர்ஸா குலாம் முர்தஸா இறந்து ஒரு வருடம் ஆன பின்பு அவர்கள் மீண்டும் இரண்டாவது முறையாக காதியானுக்கு வந்தார்கள். இந்த முறையும் மிர்ஸா குலாம் காதிர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே அவர்கள் காதியானுக்கு வந்தார்கள். அவர்கள் காதியானுக்கு அருகில் உள்ள டல்லா என்னும் சிறிய கிராமத்தில் தங்கினார்கள். டல்லா அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடம் அல்ல என்று கூறி மிர்ஸா குலாம் காதிர் தமது இல்லத்தில் தங்கிக் கொள்ளுமாறு அவர்களை கேட்டுக் கொண்டார்கள். தாம் குர்தாஸ்பூரில் தங்கியிருப்பதாலும் தமது சகோதரர் அஹ்மது (அலை) அவர்கள் பெரும்பாலும் வீட்டிற்கு வருவதில்லை என்பதாலும் தமது வீடு அவர்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கும் என்று கூறினார். மிர்ஸா குலாம் காதிர்

குர்தாஸ்பூரிலிருந்து காதியானுக்கு வரும்பொழுது அவர்களுக்கு ஏதாவது அன்பளிப்பு கொண்டு வருவது வழக்கம். மீர் சாஹிபும் அவரது மனைவியும் அதற்கு பதிலாக அவர்களுக்கு அன்பளிப்பு வழங்கினர். ஒரு நாள் இறைச்சியும் அதற்கு சுவையூட்டும் சில பொருட்களும் சேர்த்து தயாரிக்கப்படும் 'ஷாமீ கபாப்' என்னும் உணவுப்பொருள் தயாரிக்கப்பட்டது. மிர்ஸா குலாம் காதிர் புறப்பட்டு சென்று விட்டதால் அவரது இளைய சகோதரரான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அந்த கபாபுகள் அனுப்பி வைக்கப்பட்டன. அவர்களும் அதனை மனமுவந்து ஏற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தார்கள். மீர் ஸாஹிபும் அவரது மனைவியும் அன்னாருக்கு செய்த பல அன்பான உபசரிப்புகளுக்கு இந்நிகழ்ச்சி ஆரம்பமாக அமைந்தது. அந்த காலத்தில் மிர்ஸா குலாம் காதிரின் மனைவிக்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை அவ்வளவாக பிடிக்காது. எனவே இந்த நிகழ்ச்சிகள் அவரை ஏமாற்றம் அடையச் செய்தன. அவரே வீட்டின் தலைவியாக இருந்த காரணத்தினால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வீட்டில் பல வசதிக்குறைவுகளையும் கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியிருந்தது. ஆனால் அவை அனைத்தையும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பெருந்தன்மையோடும் பொறுமையோடும் மன உறுதியோடும் சகித்துக் கொண்டார்கள்.

வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளுக்கே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கஷ்டப்பட வேண்டியிருந்தது. தம் தந்தையார் விட்டுச் சென்ற சொத்தில் சரி பாதிக்கு உரிமையாளராக இருந்தபொழுதிலும் தம் சகோதரருக்கு இவ்வுலகப் பொருட்களின் மீது இருக்கும் பற்றைக் கண்டு அனைத்தையும் அவர் அனுபவிப்பதற்கே விட்டு விட்டு தாம் எந்த உரிமையும் கோராமல் இருந்தார்கள். எளிய உணவும் உடையும் தமக்குப் போதுமான தென்று வாழ்ந்து வந்தார்கள். தமது உடையை கூட பிறர் கேட்டால் மனமுவந்து வழங்கி வந்தார்கள். ஒரு முறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு பத்திரிகைக்கு சந்தா செலுத்துவதற்காக சிறிதளவு பணம் கேட்டார்கள். ஆனால் பத்திரிக்கைக்கு பணம் செலுத்துவதெல்லாம் தேவையில்லாத செலவு என்று அன்னாரின் அண்ணன் கூறி பணம் கொடுக்க மறுத்துவிட்டார். அவரது இந்த அணுகுமுறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விரும்பி ஏற்றுக் கொண்ட சிரமங்களை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது. இவ்வாறு இறை ஞானிகளுக்கு உரிய வறுமையை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களும் அனுபவிக்க நேர்ந்தது.

மீர் சாஹிபும் அவரது துணைவியாரும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தூய தன்மையாலும், இறையச்சம் மிகுந்த வாழ்க்கையாலும் பெரிதும் கவரப்பட்டார்கள். அன்னாருடைய சீரிய நற்பண்புகளைப் பற்றி தங்களுக்கிடையே புகழ்ந்து பேசிக் கொண்டார்கள்.

மிர்ஸா இமாம் தீன் மிர்ஸா குலாம் முர்தஸாவைக் கொல்ல முயன்று தோல்வியில் முடிந்திருந்தது.மிர்ஸா குலாம் முர்தஸாவின் அந்தஸ்தும் சக்தியுமே இரண்டு குடும்பங்களிலும் இருந்த விஷமம் செய்யும் பேர்வழிகளை ஒரு கட்டுக்குள் வைத்திருந்தது. ஆனால் அவர்களின் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென மிர்ஸா குலாம் முர்தஸா தமது மூத்த மகனான மிர்ஸா குலாம் காதிருக்கு கூறியிருந்தார். அவர் இறந்த பின் இமாம் தீன் நாம் ஏற்கனவே கூறியபடி, மற்ற உறவினர்களைத் தூண்டிவிட்டு மீண்டும் வழக்குத் தொடர்ந்தார். அதன் காரணமாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் பங்காளிகள் அவர்களுக்குத் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்து வந்தனர். எல்லாவிதமன தீய செயல்களிலும் ஈடுபட்டனர். எந்த ஒழுங்கும் அற்றவர்களாக இருந்தனர்.அவர்களுடைய இந்த மோசமான நிலைக்கு காரணம் அவர்கள் மார்க்கத்தை கேலி செய்பவர்களாகவும் இறை நம்பிக்கையற்றவர்களாகவும் இருந்தது தான்.இந்த தன்மைதான் அவர்களை எப்போதும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களோடு மோதச் செய்தது. அவர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை பரிகாசம் செய்தனர். அவர்களது பணிகளை

முடக்குவதற்கான அனைத்து வேலைகளை யும் செய்தனர்.

மிர்ஸா குலாம் காதிரின் மனைவி இமாம் தீனின் சகோதரி ஆவார். அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மீது வெறுப்புணர்வு கொண்டிருந்தார். உண்மையில் இந்த விரிசலின் காரணமகத்தான் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது முதல் மனைவியும் மிர்ஸா சுல்தான் அஹ்மது, மிர்ஸா ஃபஸ்ல் அஹ்மது ஆகியோரின் தாயாருமான ஹுர்மத் பீபியுடன் சுமூகமாக நடந்து கொள்ள முடியாமல் போனது. ஹுர்மத் பீபியின் சகோதரரான மிர்ஸா ஷேர் அலி, இமாம் தீனின் மைத்துனரான மிர்ஸா அஹ்மது பேக்கின் சகோதரியை மணந்திருந்தார். ஃபஸ்ல் அஹ்மது மிர்ஸா அலி ஷேரின் மகளை திருமணம் செய்திருந்தார். ஃபஸல் அஹ்மதின் மனைவியும் இமாம் தீனுக்கும் அவருடைய கூட்டத்தாருக்கும் சார்பாகவே இருந்தார். அவருக்கும் மார்க்கத்தின் மீது எந்த பற்றும் இல்லை. எனவே இமாம் தீனும் அவருடைய கூட்டத்தினரும் மார்க்கத்தின் மீதும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மீதும் தொடர்ந்து செய்து வந்த இறையச்சமற்ற கேலி கிண்டல்களை ஆதரிப்பவராக இருந்தார். எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவரோடு இணைந்து வாழ இயலவில்லை. அவ்வப்போது அவரை சென்று பார்த்து வந்தாலும் தனித்தனியே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அவருடைய வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி வந்தார்கள். இறையச்சம் கொண்டோர் மறுவுலக வாழ்க்கைக்காக இப்படிப்பட்ட சோதனைகளை அனுபவத்தே வந்துள்ளனர். உண்மையான இறை ஞானிகள் இறைவனுடைய மகிமையை நிலைநிறுத்து வதற்காக செய்யப்படும் இத்தகைய சோதனை களை இன்முகத்தோடு ஏற்றுக் கொள்கின்றனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கையும் அது போன்றே அமைந்தது.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்த உலகத்தை சேர்ந்தவர்களாக இருக்கவில்லை. எனவே உலக விஷயங்களிலிருந்தும் விலகியே இருந்துவந்தார்கள். ஆனால் சமுதாய நலனுக்காக ஆற்றவேண்டிய கடமைகளி லிருந்து ஒரு போதும் விலகியவர்களாக இல்லை. அவர்கள் எப்போதும் எளியவர்களின் நலனைப்பேணுபவர்களாக இருந்து வந்தார்கள். 1877 ஆம் ஆண்டு நாடோடி சாது ஒருவர் காதியானுக்கு வருகை தந்தார். அவர் தம்முடைய உடல் வலிமையை காட்டுகின்ற வித்தைகளை பொது இடங்களில் நடத்திக் காட்டினார். அப்பாவி இந்துக்கள் அவரை ஹனுமானாகவே கண்டனர். ஆனால் உண்மையில் அவர் ஓர் ஒழுக்கமற்ற மனிதராக இருந்தார். அக்கம் பக்கத்திலுள்ள மோசமான மனிதர்கள் அவரை சுற்றி இருந்தனர். கிஷன் சிங் என்னும் ஆரியர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுடன் மருத்துவம் பயின்று வந்தார். அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் வந்து பெரிய மிர்ஸா (ஹஸ்ரத் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தந்தையார்) இறந்துவிட்டார். உங்களின் சகோதரரான மிர்ஸா குலாம் காதிர் அரசு பணியில் சேர்ந்து விட்டார். எனவே அவர்களால் இந்த விஷயத்தில் எதுவும் செய்ய முடியாது. நீங்களும் இதில் எதுவும் செய்வீர்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் நீங்களும் இது போன்ற விஷயங்களில் அக்கறை காட்டுவதில்லை என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கிஷன் சிங்கிடம் என்ன நடந்தது என்று வினவினார்கள். அப்போது கிஷன் சிங் சாதுவைப் பற்றியும் அவரால் ஏற்படும் தீய விளைவுகளைப் பற்றியும் விவரித்துக் கூறினார். உடனே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் செயலில் இறங்கினார்கள். கிராமக் காவலரை அழைத்து சாதுவை உடனடியாக காதியானை விட்டு வெளியேற்றும் படி கட்டளையிட்டார்கள். அந்த கட்டளை யாரும் மறுத்துப் பேசமுடியாத அளவுக்கு உறுதியானதாகவும், அதிகார தொனியோடும் அமைந்திருந்தது. இந்நிகழ்ச்சி இறையச்சமே எல்லா ஆற்றல்களிலும் மேலானது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் நல்லொழுக்கப் பண்புகள் மிக உயர்வான வையாக இருந்தன. அவர்களுடைய

முதன்மையான கவனம் ஆன்மீக முன்னேற்றத்தின் பக்கமே இருந்தது. அதே நேரத்தில் அவர்கள் உடல் சுத்தத்திலும் சுற்றுப்புற சுகாதாரத்திலும் கவனமற்ற வர்களாக இருக்கவில்லை. தம்முடைய சொந்த சுத்தத்தில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். இந்த விஷயத்தில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்த்தார்கள்.ஆனால் அவர்கள் காட்டிய இந்த முன்னுதாரணம் மற்றவர்களால் சரியாக பின்பற்றப்படவில்லை. இந்தியாவில் சுகாதாரத்திற்கு இத்தனை முக்கியத்துவம் தரப்படவில்லை. ஏழ்மையின் காரணமாகவோ அதிக படிப்பறிவின்மை யாலோ அல்லது நீண்ட கால பழக்கத்தின் காரணமாகவோ ஏற்பட்டிருக்கலாம். ஆனால் கிராமப்புறங்களில் சாலையோரங்களில் மட்டுமல்லாது குடியிருப்புகளின் அருகிலும் குவியல் குவியலாக குப்பை கூழங்கள் குவித்து வைக்கப்பட்டிருப்பதை காண முடியும். குடியானவன் தன் பயிருக்காக உரத்தை அருகிலேயே சேமித்து வைக்கிறான். அதுவே இந்த சுகாதாரக்கேட்டிற்கு காரணமாக அமைந்து விடுகிறது. கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள மக்களிடம் இன்னொரு பழக்கம் உள்ளது. அது பொது இடங்களில் மல, ஜலம் கழிப்பதாகும். தங்கள் வீடுகளுக்கும் கடைகளுக்கும் அருகில் உள்ள இடங்களை கழிப்பறையாக பயன்படுத்தினர். காதியான் மக்களும் இதே பழக்கத்தை கொண்டிருந்தனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இது போன்ற பழக்க வழக்கங்களுக்கு ஒரு முற்று புள்ளி வைக்க முயற்சி செய்தார்கள். ஆனால் நீண்ட காலப் பழக்கமான அதை ஒழிப்பதில் அவர்கள் அதிகம் எதுவும் சாதிக்க முடியவில்லை.ஒருமுறை உயர் நிலையி லுள்ள ஒரு அரசு அதிகாரி சுகாதாரம் தொடர்பான ஒரு சுற்றறிக்கையை அனுப்பினார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொண்டு இந்த பணியை காவல் துறையிடம் ஒப்படைக்கலாம் என உள்ளாட்சி அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறி கடிதம் எழுதினார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு கடுமையான வயிற்று வலியும் வயிற்றுப்போக்கும் ஏற்பட்டது. அதன் காரணமாக அவர்களின் உடல் நிலை கவலைக் கிடமானது. மவ்லவி முஹம்மது ஹுஸைனின் தந்தையாரான சவுதிரி ரஹீம் பக்ஷ் என்பவர் அன்னாரை உடல் நலம் விசாரிக்க பட்டாலாவிலிருந்து வந்திருந்தார். அது ஒரு தொற்று நோய் போல் தோன்றியது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு வயிற்றோட்டத்தோடு இரத்தப்போக்கும் ஏற்பட்டது. அதன் காரணமாக அவர்கள் மிகவும் தளர்ந்து போனார்கள். அவர்கள் பிழைப்பார்கள் என்ற நம்பிக்கையே இல்லாமல் இருந்தது. அவர்களுடைய உறவினர்கள் எல்லாம் மிகுந்த கவலை அடைந்தனர். 16 நாட்கள் இவ்வாறு கழிந்த பின்னர் இறைவன் அன்னாருக்கு ஒரு சிகிச்சையை இறையறிவிப்பின் வாயிலாக அருளினான். ஒரு பாத்திரம் நிறைய ஆற்று மணலை வாங்கி ஒரு துஆவை ஓதியவாறு கை, கால், முகம், மார்பு, முதுகு ஆகிய பகுதிகளில் பூசும்படி அவர்களுக்கு அறிவிப்பு கிடைத்தது. அதன் படி அவர்கள் இந்த சிகிச்சையை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு அற்புதமான சுகம் கிடைத்தது. அவர்களின் உடல் முழுவதும் ஓர் எரிச்சல் இருந்து வந்தது. ஆனால் இந்த சிகிச்சை அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளித்தது. சில நிமிடங்களிலேயே அவர்கள் குணம் அடைந்தார்கள்.

(தொடரும்)

தமிழில்:
S.S.H. முஹம்மது லெப்பை

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

தொடர்: 6

# குறிக்கோள் பற்றிய விளக்கம்

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

இப்போது நான் மலக்குகள் (வானவர்கள்) பற்றிய குறிப்பின் பக்கம் திரும்பியவாறு கூறுவது என்னவெனில், திருக்குர்ஆன் எந்த வகையில் வானவர்களைப் பற்றிய நிலையை விளக்கியிருக்கின்றதோ அது மிகவும் நேரானதும், அனுமானத்திற்கு நெருக்கமானது மான வழியாகும். அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர மனிதனுக்கு வேறு வழியில்லை. திருக்குர்ஆனைப் பற்றி மிக ஆழமான கண்ணோட்டத்தில் சிந்திக்கும் போது தெரிய வருவது என்னவென்றால், மனிதன் - ஏன் - பூமியிலுள்ள அனைத்து படைப்புகளின் வெளிப்படையான, உட்புறமான வளர்ச்சிக்கு சில காரணிகள் இருப்பது அவசியமானதாகும். வானவர்கள் என்ற பெயரால் அழைக்கப்படும் சில தூய ஆன்மாக்களின் தொடர்புகள் வானத்தின் பல்வேறு பகுதிகளுடன் தனித்தனியானவையாக இருக்கின்றன. சில (வானவ)ர் தமது சிறப்பான தாக்கங்களினால் காற்றை வீசச் செய்பவர்களாவர். இன்னும் சிலர் வேறு சில தாக்கங்களை பூமியில் உருவாக்குபவர்களாவர் என்பது திருக்குர் ஆனின் சிற்சில சைகைகளின் மூலமாக மிகவும் தெளிவாகத் தெரிகின்றது.

அந்த தூய ஆன்மாக்கள் தமது ஒளியின் தொடர்பின் காரணமாக வானங்களில் காணப்படும் ஒளிமிக்க, பிரகாசமான நட்சத்திரங்களுடன் தொடர்புடையவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எனினும் நாம் அதை, பூமியிலுள்ள ஒவ்வோர் உயிருள்ளதும் தன்னிடம் உயிரைக் கொண்டிருப்பது போன்றதொரு தொடர்பாக புரிந்து கொள்ளக் கூடாது. அவ்வாறன்று. அந்த தூய ஆன்மாக்களுக்கு ஆன்மீகமான முறையில் கிடைத்திருக்கும் தமது ஒளி மற்றும் பிரகாசம் ஆகியவற்றின் தொடர்பின் காரணமாக, ஒளிமிக்க நட்சத்திரங்களுடன் ஒரு மேலோட்டமான தொடர்பு உள்ளது. அது எத்தகைய தொடர்பு என்றால், அந்த தூய ஆன்மாக்கள் அந்த நட்சத்திரங்களை விட்டுப் பிரிவதைக் கற்பனை செய்து பார்த்தால், பிறகு அவர்களின் ஆற்றல்களில் வித்தியாயம் ஏற்பட்டுவிடும். இந்த ஆன்மாக்களுடைய மறைமுகமான கையின் வலிமையினால் எல்லா நட்சத்திரங்களும் தத்தமது பணிகளில் ஈடுபட்டிருக்கின்றன. இறைவன் அனைத்து உலகத்திற்கும் உயிராக இருப்பதைப் போன்றே அந்த ஒளிமிக்க ஆன்மாக்கள் நட்சத்திரங்கள் வான்கோள்கள் ஆகியவற்றிற்கு உயிராகவே இருக்கின்றன. (ஆயினும் இங்கே முழுமை யான ஒப்புமை என்ற பொருளில் அல்ல - நூலாசிரியர்). மேலும் அ(ந்த வான)வர்கள் (நட்சத்திரங்கள் கோளங்கள் ஆகியவற்றை விட்டும்) தனியாக பிரிந்திருப்பதினால் அவற்றின் இருப்பின் (உள்ளமையின்) நிலையில் முற்றிலும் குழப்பமான வழி காணப் படுவது கண்டிப்பானதும் அவசியமானதுமாகி விடும். மேலும் எந்த அளவுக்கு வானங்களில் கோள்களும், நட்சத்திரங்களும் காணப்படு கின்றனவோ அவை, பூமியின் அனைத்து படைப்புகள் முழுமை அடைவதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் எப்பொழுதும் பணியில் ஈடுபட்டுள்ளன என்பதில் எவரும் இன்றுவரை கருத்து வேறுபாடு கொண்டதில்லை.

சுருக்கமாக, எல்லா தாவரங்கள், கனி மங்கள், உயிரினங்கள் ஆகியவற்றின் மீது வான் கோள்களின் தாக்கம் இரவு பகலாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது கண்டறியப்பட்ட, சான்று எனும் குன்றின் மேல் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். சந்திரனின் ஒளி பழங்களை பருமனாக்குவதற்கும் சூரிய ஒளி அவற்றை பழுக்க வைப்பதற்கும், இனிப்பாக்குவதற்கும், வேறு சில காற்றுகள் பழங்களை பெருமளவில் கொண்டு வருவதற்கும் சந்தேகமின்றி தாக்கத்தை உருவாக்குபவையாக இருக்கின்றன என்பதை அறிவீனரிலும் அறிவீனரான பாமரனும் நம்பத்தான் செய்வார். ஆக, வெளிப்படையான உலகம் இவற்றின் பல்வேறு தாக்கங்களினால் வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருக்கும் போது அந்தரங்கமான விவரங்களிலும் அந்த ஒளிமிக்க ஆன்மாக்கள் இறை கட்டளை யினால் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக் கின்றன என்பதில் என்ன சந்தேகம் இருக்க

முடியும்? உயிருக்கு உடலுடன் தொடர்பு இருப்பதைப் போன்று அந்த ஒளிமிக்க ஆன்மாக்களுக்கு (வானவர்களுக்கு) ஒளிமிக்க உடல்களுடன் உறுதியான தொடர்பு இருக்கின்றனவே!

இனி, இதற்குப்பிறகு இன்னொன்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். இறைவனுக்கும் அவனுடைய தூய நபிமார்களுக்கும் இடையில் வஹிஎனும் ஒளியை வழங்குவதற்காக இன்னொரு ஊடகத்தை கற்பிப்பது வெளிப்படையில் பார்க்கும்போது, மிகவும் மரியாதைக்கு அப்பாற்பட்ட விஷயமாகத் தெரியலாம். ஆனால் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், இதில் எவ்வித மரியாதைக் குறைவான விஷயமும் இல்லை; இன்னும் சொல்லப்போனால், உலகத்திலுள்ள எல்லா பொருள்களைப் பற்றிய விஷயத்திலும் மிகத் தெளிவான முறையில் கண்டறியப்படுகின்ற, உணரப்படுகின்ற இறைவனின் பொதுவான இயற்கைச் சட்டத்திற்கு உட்பட்டது தான் என்பதை நன்றாகப் புரியலாம். ஏனெனில், நபிமார்கள் (அலைஹிமு ஸ்ஸலாம்) அவர்களும் தமது வெளிப்படையான உடல் மற்றும் வெளிப்படையான ஆற்றல் ஆகியவற்றைப் பொருத்தவரை (வானவர்களாகிய) இதே ஊடகங்களுக்கு தேவையுடையோராக இருக்கின்றனர் என்பதை நாம் பார்க்கின்றோம்.

நபியின் கண் எவ்வளவுதான் ஒளிமிக்கதாகவும், அருளுக்குரியதாகவும் இருந்தாலும் சாதாரண மக்களின் கண்களைப்போன்று சூரியன் அல்லது அதைபோன்ற வேறொன்று இல்லாமல் அது எதையும் பார்க்க முடியாது. அவ்வாறே காற்று எனும் ஊடகம் இல்லாமல் எதையும் கேட்கவும் முடியாது. எனவே, நபியின் ஆன்மீகத்தின் மீதும் இந்த வான் கோள்களின் ஒளிமிக்க ஆன்மாக்களின் தாக்கம் நிச்சயம் ஏற்படும்; இன்னும் சொல்லப் போனால் மற்றவர்களை விட அதிகமாக தாக்கம் ஏற்படும் என்பதையும் கண்டிப்பாக நம்ப வேண்டியது ஏற்படுகிறது. ஏனெனில் எந்த அளவுக்கு ஆற்றல் தெளிவாகவும், முழுமையாகவும் இருக்கிறதோ அதே அளவுக்கு தாக்கமும் தெளிவாகவும், முழுமையாகவும் ஏற்படுகிறது. இந்த நட்சத்திரங்கள், விண் கோள்கள், தத்தமது உடலுக்கென்று ஓர் ஆன்மாவைக் கொண்டுள்ளன என்றும் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகின்றது. அவற்றிற்கு விண் கோள்களின் ஆன்மாக்கள் எனவும் பெயர் சூட்டலாம். மேலும் நட்சத்திரங்களிலும், விண் கோள்களிலும் அவற்றின் உடலுக்கேற்ப பலவிதமான சிறப்பம்சங்கள் காணப்படு வதைப் போன்றும், அவை பூமியிலுள்ள ஒவ்வொன்றின் மீதும் தமது தகுதிக்கேற்ப தாக்கத்தை ஏற்படுத்து வதைப் போன்றும் அவற்றின் ஒளிமிக்க ஆன்மாக்களிலும் பலவிதமான சிறப்பம்சங்கள் இருக்கின்றன. அவை ஞானம் மிக்க இறைவனின் கட்டளைக் கிணங்க, பூமியின் அகத்திலும் தமது தாக்கத்தை ஏற்படுத்து கின்றன. மேலும் இதே ஒளிமிக்க ஆன்மாக்கள் முழுமையான அடியார்களுக்கு பௌதீக வடிவத்தில் தோன்றி வெளிப்படுகின்றன. மேலும் மனித உருவத்தில் தோன்றி தென்படுகின்றன.

இந்த சொற்பொழிவு வெறும் பேச்சு திறமையினால் அல்ல; மாறாக இது, சத்தியத்தையும் தத்துவத்தையும் தேடுபவர்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொண்டே ஆக வேண்டிய உண்மையாகும். ஏனெனில், பூமியிலுள்ள அண்ட சராசரங்களுக்கான வளர்ச்சி வானத்தின் சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும் போது, பூமியின் பொருள்களின் மீது தொன்று தொட்டு நாம் பார்வையிடும்போதும் இந்த வளர்ச்சியின் விளைவுகளை ஒவ்வொரு உடலின் மீதும் - அவை தாவரங்களாக இருந்தாலும் கனிமங்களாக இருந்தாலும் விலங்குகளாக இருந்தாலும் பகிரங்கமான முறையில் நமக்கு தென்படுகின்றன. எனவே, இந்த தெளிவான அனுபவத்தின் மூலமாக, ஆன்மீக முழுமைத் தன்மைகள் உள்ளம். சிந்தனையின் ஒளியின் தொடர் ஆகியவை முன்னேற்றமடைவதிலும் சந்தேகமின்றி இந்த ஒளிமிக்க ஆன்மாக்க (ளாகிய வானவர்க) ளுக்கு தொடர்பு இருக்கின்றது என்பதையும் ஏற்றுக் கொள்ளும் கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

இந்த தொடர்பை அடிப்படையாகக் கொண்டே ஒளிமிக்க ஷரீஅத், அல்லாஹ் வுக்கும், அவனுடைய தூதர்களுக்கும் இடையில் உருவகமாக வானவர்களை ஊடகமாகக் கொண்டிருப்பதை ஒரு கட்டாய விஷயமாக வெளிப்படுத்தியிருக்கின்றது.

அதன் மீது நம்பிக்கை கொள்வது மார்க்கத்தின் தேவைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுள்ளது. எவர்கள் தமது வெறுக்கத்தக்க அறியாமையினால் இந்த இறை தத்துவத்தைப் புரியவில்லையோ-உதாரணமாக ஆரியர்கள், பிரம்ம சமாஜிகள் ஆகியோர் தமது உள்ளங்களில் நிரம்பியிருக்கும் தேவையற்ற கருமித்தனம், வெறுப்பின் காரணமாக, திருக்குர்ஆனின் மீது, அது அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர்களுக்கு மத்தியில் வானவர்கள் எனும் ஊடகத்தை அவசியமாகக் கொள்கின்றது என்ற ஆட்சேபணையை சுமத்தியுள்ளனர். ஆனால், பூமியில் காணப்படும் இறைவனின் வளர்ச்சி பற்றிய பொதுவான சட்டமும் இதே விதிமுறைப் படிதான் இருக்கின்றது என்பதை அவர்கள் புரியவுமில்லை; எண்ணிப்பாக்கவுமில்லை. இந்துக்களின் கூற்றுப்படி, எந்த ரிஷிமார்களின் மீது இந்துக்களின் நான்கு வேதங்கள் இறங்கினவோ அவர்கள் தமது பௌதீக ஆற்றல்கள் சரியாக நிலைத்திருப்பதற்கு வானத்தின் ஊடகங்களின் தாக்கங்களுக்கு தேவையுடயவர்களாக இருக்கவில்லையா என்ன? அவர்கள் சூரியனின் ஒளி இல்லாமல் கண்ணின் ஒளியினால் பார்க்கும் பயனை பெற முடிந்ததா? அல்லது காற்று எனும் ஊடகம் இல்லாமல் எந்தவோர் ஓசையையாவது அவர்களால் கேட்க முடிந்ததா? ஒருபோதும் இல்லை என்பதே இதற்குரிய பகிரங்கமான விடையாக இருக்கும். மாறாக, அவர்களும் வானத்திலிருந்து கிடைக்கும் பரிணாம வளர்ச்சி பெறுதல் மற்றும் முழுமையடையச் செய்தல் ஆகியவற்றிக்கு மிகவும் தேவையுடை யோராக இருந்தனர். இந்துக்களின் வேதங்கள் இந்த வானவர்களைப்பற்றி எங்கு மறுத்துள்ளது? இன்னும் கூறப்போனால், அவை இந்த ஊடகங்களை ஏற்றுக் கொள்வதிலும், மதிக்கத்தக்கவையாக புரிந்து கொள்வதிலும் அவற்றின் தகுதியை இறைவனின் தகுதியுடன் இணையாக்கிவிடும் அளவுக்கு மிகவும் மிகைப்டுத்தி விட்டது.

ரிக் வேதம் ஒன்றையே பாருங்கள்! அதில் எந்த அளவுக்கு வானத்தின் ஊடகங்களும், பூதங்களும் வணங்குவது காணப்படுகிறது. மேலும் எவ்வாறு அவற்றிற்கு கண்ணியமளிப் பதிலும், மரியாதை செலுத்துவதிலும் அவற்றிற்கு புகழ்மாலை சூட்டுவதிலும் அவ்வேதங்கள் பல பக்கங்களை கருமையாக்கி விட்டது! எவ்வளவு தன்னடக்கத்துடனும், மன்றாடியவாறும் அவற்றிடம் பிரார்த்தனைகள் வேண்டப்பட்டுள்ளன. அவை ஒப்புக் கொள்ளப்படவுமில்லை.

ஆனால் பிரித்தறிவிக்கத் தகுந்த குர்ஆனோ அப்படிச் செய்யவில்லை ! மாறாக, உயிருக்கு உடலுடன் இருக்கும் தொடர்பைப்போன்று, வானத்தின் உடல்களுடன் அல்லது ஐம் பெரும் ஊடகங்களுடன் அல்லது வளிமண்டலத்துடன் தொடர்புடைய அந்த ஒளிமிக்க ஆன்மாக்களை, மலக்குகள் (வானவர்கள்) ஜின்னாத் (மறைந்திருக்கும் ஊடகங்கள்) என்ற பெயரிலேயே அழைக் கிறது. மேலும் ஒளிமிக்க நட்சத்திரங்கள், கோள்களை விட தனக்கென ஒரு தகுதியைக் கொண்டிருக்கின்ற அந்த ஒளிமிக்க வானவர்களை சுய சக்தியுள்ளவர்களாகவோ, தற் சார்புள்ளவர்களாகவோ ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அந்த வானவர்களை தமது தூய தன்மையில் இறை தூதர்களுக்கும் இடையில் ஒரு ஊடகமாகக் கற்பிக்கவில்லை. மாறாக, அவர்களுக்கு இருக்கும் தொடர்பு உயிரற்ற ஒன்று ஓர் உயிருள்ளவரின் கையில் இருப்பதைப் போன்றதொரு தொடர்பாக வெளிப்படுத்தியிருக்கிறது, அந்த உயிரற்ற தைக் கொண்டு எவ்வகையில் அந்த உயிருள்ளவர் வேலை வாங்க விரும்புகிறாரோ வேலை வாங்குகின்றார். இதன் அடிப்டை யிலேயே திருக்குர்ஆனில் சில இடங்களில் உலகத்தின் ஒவ்வொரு மூலப்பொருள் களுக்கும் மலக்குகள் (வானவர்கள்) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஏனெனில் அவ்வனைத்து மூலப் பொருள்களும் தமது கண்ணிய மிக்க இறைவனின் குரலுக்கு செவிசாய்க்கின்றன. மேலும் அவற்றிற்கு கட்டளையிடப்பட்டதையே அவை செய்கின்றன. உதாரணமாக, மனித உடலில் நோயின் பக்கமோ அல்லது உடல் நலத்தின் பக்கமோ என்ன மாற்றங்கள் ஏற்படுகின் றனவோ அதன் ஒட்டுமொத்தமான தொகுப் பின் ஒவ்வோர் அணுவும் இறைவனின் விருப்பத்திற்கேற்ப முன்பின் காலெடுத்து வைக்கின்றது.

(தொடரும்)

**தமிழில்:**

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A**

# ஜுமுஅத்துல் விதா

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது
(நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹ்)

ஆண்டு முழுவதும் பல்வேறு கோணங்களில் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அந்த ஜுமுஆ கடைசியில் வந்து விட்டது. இறைவனுடைய ஏராளமான அடியார்கள், இறைவனுடைய அடியாராக இருந்தும், ஆண்டு முழுவதும் இறைவனுக்கு அடியாராக இருப்பதில்லை. ஆயினும் கருணையையும், அருளையும் அவனிடமிருந்து எதிர்பார்க் கிறார்கள். உண்மையில் அப்படிப்பட்டவர் களுக்கு இந்த ஜுமுஅத்துல் விதா, இறைவனை சந்திக்கும் ஒரே ஒரு நாள்தான். அந்த நாளும் வந்து நின்று விடக்கூடாது; கழிந்து விட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். அந்த நாள் வரவேண்டும்; அதில் இறைவனை சந்தித்து, வாழ்நாள் முழுக்க செய்த பாவங்களை மன்னிக்க வைக்க வேண்டும்; பிறகு அந்த நாள் கழிந்து விட வேண்டும். இந்த கோணத்தில்தான் அவர்கள் இதனை ஜுமுஅத்துல் விதா (வழியனுப்பும் ஜுமுஆ) எனக் கூறுகின்றனர்.

இன்னும் சிலர் வேறு வகையில் அதனை ஜுமுஅத்துல் விதா (வழியனுப்பும் ஜுமுஆ) எனக் கூறுகின்றனர். அவர்கள் அந்த ஜுமுஆவுக்காகக் காத்திருக்கின்றனர். ஆனால் அதை வழியனுப்பும் போது அவர்களுடைய உள்ளம் துக்கத்தால் நிறைந்து விடுகிறது. அன்பிற்குரிய ஒருவர் வரும் போது, அவர் திரும்பிப் போய் விடத்தான் போகிறார் என்ற உறுதி மனதில் இருக்கும் போது அவருடைய வருகையில் மகிழ்ச்சியுடன் துக்கமும் இணைந்திருக்கும். மகிழ்ச்சியும் துக்கமும் ஒரே நேரத்தில் தத்தமது தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். ஆக, ஜுமுஅத்துல் விதா சிலருக்கு இத்தகைய நிலையையும் உருவாக்குகிறது. இந்த பொருளில்தான் அவர்கள் அதனை ஜுமுஅத்துல் விதா (வழியனுப்பும் ஜுமுஆ) எனக் கூறுகிறார்கள். ரமலான் விடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ரமலானின் தேவைகளை நாம் நிறைவேற்றவும் செய்தோமா இல்லையா என்பது இறைவனுக்குத்தான் தெரியும். இது திடீரென்று நம் கையிலிருந்து நழுவிக் கொண்டிருக்கின்றதே! என ஏக்கத்துடன் அவர்கள் பார்க்கின்றனர். இவ்வாறு அடுத்த ஜுமுஆவை எதிர்நோக்கி உட்கார்ந்திருக் கின்றனர். இவ்வாறு ஒரு வகையில் இந்த ஜுமுஆவை அவர்கள் விதா செய்கிறார்கள் (வழியனுப்புகின்றார்கள்) என்றால் இன்னொரு வகையில் அதனை இஸ்திக்பால் செய்கிறார்கள். (வரவேற்கின் றார்கள்). ஆக, இரண்டும் கலந்த உணர்வுகள் அவர்களுக்கு இருக்கின்றன. இந்த கருத்து பற்றி நான் சிந்தித்த வரை, திருக்குர்ஆனின் ஒரு வசனம் அத்தகு உணர்ச்சிகளுக்கு தலைப்பாகத் திகழ்கின்றது. அது சூரா பக்கராவின் 184-வது வசனமாகும். அதன் தலைப்பு ‘அய்யாமம் மஃதூதாத்’ என்பதாகும். எண்ணி சில நாட்கள் தானே! என அதற்கு மொழியாக்கம் கொடுக்கலாம். நான் சிந்தனை செய்து பார்த்தபோது, இந்த வசனம் முழு வாழ்க்கையையும் சூழ்ந்துள்ளது; முழு ரமலானையும் சூழ்ந்துள்ளது என எனக்குத் தெரிய வந்தது. ஏனெனில் ரமலானைப் பற்றி திருக்குர்ஆன் கூறுகிறது: உங்களில் நோயாளிகளும் இருக்கலாம். பயணிகளும் இருக்கலாம். அவர்களின் வழியிலும் இந்த ரமலான் வந்தே விடுகிறது. ஆயினும், மீண்டும் இந்த நாட்களை சந்திக்கும் பாக்கியம் கிடைக்கும் என அவர்கள் நம்புகிறார்கள். இதெல்லாம் ரமலானைப்பற்றிய கருத்தாகும்.

ஆனால் வாழ்க்கைக்கும் அய்யாமம் மஃதூதாத் (எண்ணி சில நாட்கள் தானே!) என்ற இந்த தலைப்பைக் கொடுக்கலாம். வாழ்க்கையிலும் மனிதன் சில நேரத்தில் உடல் நலமுள்ள சூழந்தையாக நுழைகின்றான். சில நேரத்தில் நோய்வாய்ப்பட்டவரை போன்று நுழைகிறான். ஒரு நோயுள்ள குழந்தை தன் வாழ்க்கை முழுவதையும் நோயில் கழித்ததாக உணர்கிறது. அப்போது ‘எண்ணி சிலநாட்கள் தானே’ எனக் கூறமுடியாது. வாழ்க்கை மிக நீண்டதாகத் தெரிகிறது. ஒரு நீண்ட இரவு போன்று பரந்து கிடக்கிறது. ஆனால்

மரணத்தின் வாயிலில் செல்லும் போது எண்ணி சில நாட்கள் தானே! அவையும் கழிந்து விட்டனவே! என்ற உண்மை அவருக்கு புரிகிறது.

உடல் நலமுள்ள குழந்தையும் வாழ்க்கை ஒரு போதும் முடிவுராது என நினைக்கிறது. முழு வாழ்க்கையும் எல்லையற்ற ஒன்றாக அதற்கு முன்னால் தெரிகிறது. ஆனால் மரணத்தின் விளிம்பை அடையும் பொழுது அய்யாமம் மஃதூதாத் - எண்ணி சில நாட்கள் தானே! என்ற குரல் தன்னையுமறியாமல் அவருடைய உள்ளத்திலிருந்து எழுகிறது. இதுதான் மனித உள்ளத்தின் ஆழமான படிப்பினையை நமக்கு புகட்டுகிறது.

இப்போது அருளுக்குரிய ரமலானின் பெரும் பகுதி கழிந்து விட்டது. நான் தற்போது கூறியது போல நம்மில் நோயாளிகளும் இந்த மாதத்தில் நுழைந்திருந்தனர்; உடல் நலம் உள்ளவர்களும் நுழைந்திருந்தனர். இந்த இருவருக்கும் எண்ணி சில நாட்கள் தானே இருந்தன என்ற செய்தியை இந்தக் கடைசி நாட்கள் கொடுக்கின்றன. ஆனால் இருவரின் முடிவு தனித்தனியானதாகும்,. இருவரின் முடிவு வேறுபட்டதாகும். பாருங்கள். சுரங்கப்பதை கடைசியில் முடியத்தான் போகிறது. ஒவ்வொரு சுரங்கப் பாதையின் கடைசியிலும் வெளிச்சம் தெரியும் என ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. ஆனால் இது குறைபாடுள்ள பழமொழியாகும். இது சரியானதல்ல. சுரங்கப்பாதைக்கு கடைசியில் இரவாக இருந்தால் எப்படி வெளிச்சம் தெரியும்? அப்படி என்றால் சுரங்கப்பாதைக்குக் கடைசியிலும் ஒரு நீண்ட இரவும் இருக்கலாம்; நல்ல வெளிச்சமும் இருக்கலாம். பாருங்கள் திருக்குர்ஆன் இந்த இரண்டு விஷயங்களையும் எவ்வாறு எடுத்துரைக்கிறது!

இன்றைய ஜுமுஆவும் இன்றைய ஜுமுஆதொழுகையும் எத்தகையதென்றால் இன்று ஒன்று கூடுவது போல வேறு எந்த ஜுமுஆவிலும் முஸ்லிம்கள் ஒருபோதும் ஒன்று கூடுவதில்லை. அனைவரும் தமது பாவங்கள் மன்னிக்கப்படும் என இறை அருளின் மீது நம்பிக்கை வைத்து வருகின்றனர். ஆனால் அவர்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பாவங்கள் மன்னிக்கப்படுதல் என்பதை இரண்டு விதமாகப் புரிய வைக்கலாம். ஒன்று, பாவங்கள் மன்னிக்கப்பட்டுக்கொண்டே இருத்தல்; நீங்கள் பாவங்கள் செய்து கொண்டே இருத்தல். அப்படிப்பட்டவர் தமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன எனக் கருதுவது அவருடைய ஏமாற்றமாகும். **ஏனெனில் திருக்குர்ஆனின் மரபுச் சொல்லின் படி, பாவம் மன்னிக்கப்படுதல் என்றால், பாவங்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. இந்த வகையில் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டனவா அல்லது மன்னிக்கப்படவில்லையா என ஒவ்வொரு மனிதனும் தனது மனதை அலசிப்பார்க்க வேண்டும்.** எனவே நீங்கள் அதிகம் உழைத்தால் பாவங்கள் மன்னிக்கப்படுவது பற்றி நான் தற்போது கூறிய கருத்தை அடைவதற்கு முயற்சி செய்தால் உள்ளம் தூய்மை அடைந்து பாவத்தின் மீது உங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு விடும். இது தான் மிகப்பெரும் வெற்றியாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப் பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“இறைவணக்கம் செய்பவரின் மிக மேலான குறிக்கோள் இறைவனுடைய நெருக்கம் கிடைக்கவேண்டும் என்பதுதான். இதன் மூலமாகத்தான் இறை இருப்பு பற்றி திட நம்பிக்கை கிடைக்கிறது.”

எனவே அல்லாஹ் கிடைக்க வேண்டும் என்பதற்காக அவனை அழைத்தவாறு ரமலானில் நாம் நுழைய வேண்டும். மேலும் அல்லாஹ் கிடைத்துவிட்டான் என்ற நம்பிக்கையால் உள்ளம் நிரம்பியிருக்கும் நிலையில் ரமலானிலிருந்து வெளிவர வேண்டும். இந்த கருத்தை தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“இங்கு சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒருபக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி, *ஸல்லி*

*அலைஹிம். இன்ன ஸலாதக சகனுன் லஹும்* (அவர்களுக்காக நீர் தொழவைப்பீராக. உமது தொழுகை அவர்களுக்கு அமைதியை தருகிறது) உமது தொழுகையினால் அவர்களுக்கு குளிர்ச்சி ஏற்படுகிறது. ஆவேசம், உணர்ச்சிகளின் நெருப்பு தணிந்து விடுகிறது என அல்லாஹ் கூறினான். மறுபக்கம் *ஃபல் யஸ்தஜீ பூலீ* (அவர்களும் எனது கட்டளைகளுக்கு செவி கொடுக்க வேண்டும்) எனவும் கட்டளையிட்டான். இந்த இரண்டு வசனங்களையும் இணைத்துப் பார்க்கும் போது துஆ செய்கின்றவருக்கும் துஆ செய்யச் சொன்னவருக்கும் உள்ள தொடர்புகளும் அதனால் ஏற்படும் விளைவுகளும் தெரிய வருகிறது. ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷஃபாஅத்தும் (பரிந்துரையும்) துஆவுமே போதுமானது; நாம் எதையும் செய்யத் தேவையில்லை எனக் கூறவில்லை. அதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிந்துரையும் துஆவும் தேவையேயில்லை எனவும் கருதிவிடக்கூடாது."

ஹஸ்ரத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்காக துஆ செய்திருக்கிறார்கள் என்றால், நமக்காக ஷஃபா அத்தும் (பரிந்துரையும்) செய்வார்கள். அவர்களின் துஆக்களினால் நமக்கு நிம்மதி கிடைத்து விடும் என மக்கள் நினைத்து எந்த முயற்சியும் செய்யாமல் நிம்மதியாக இருந்து விட்டார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப் பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நீர் அவர்களுக்காக துஆ செய்வீராக. உமது துஆ அவர்களுக்கு அமைதியைத் தருகிறது என்று ஓரிடத்தில் கூறினாலும் இன்னோரிடத்தில், *ஃபல்யஸ்தஜீபூலீ* - அவர்களும் என் கட்டளைகளுக்கு செவி கொடுக்க வேண்டும் என்றும் வந்துள்ளது தானே? எனவே நீங்களும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு பதில் கொடுக்காத வரை, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துஆவையும், ஷஃபாஅத்தையும் (பரிந்துரை யையும்) மட்டும் நம்பியிருக்கக் கூடாது. நீங்கள் உங்கள் சார்பாக மிக நேர்மையுடன் அல்லாஹ்வின் கட்டளை களுக்கு பதில் கொடுங்கள். ஆனால் நீங்கள் பலவீனமான வர்கள். அதற்கு பதில் கொடுப்பதில் சில பலவீனங்கள் இருக்கும். அந்த பலவீனங்களை நீக்குவதற்கு அல்லாஹ்வுடன் முழுமையாக இணைந்த ஒருவர் தேவை. அவர் ஒருபக்கம் உங்களுடைய கையை பிடித்து, மறுபக்கம் எங்கு வரை செல்ல வேண்டியது இருந்ததோ அங்கு சென்றடைய வைத்து இறைவனுடன் சேர்க்க வேண்டும்.

இப்போது பாருங்கள்! எவ்வளவு நுட்பமன கருத்து! மனிதனின் வெற்றிகரமான வாழ்க்கையின் இரகசியம் இதில் கூறப்பட்டுள்ளது. மேலும் இது, கிறித்தவர்களின் இரட்சிப்புக் கொள்கையை விட்டும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. ஏனெனில் கிறித்தவர்களின் இரட்சிப்புக் கொள்கையின்படி, பாவங்களில் எவ்வளவு வேண்டுமானாலும் மூழ்கிக் கொண்டே செல்லுங்கள். இயேசுவே உண்மையாளர் என விசுவாசம் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு வாழ்நாள் வரை எத்தனை பாவங்களை செய்தாலும் அவை மன்னிக்கப்படும். இயேசுவை உண்மையாளர் என ஒரே ஒரு முறை மட்டும் கூறி விட்டால் போதும் என்பதாகும். இந்த இரட்சிப்புக் கொள்கை (?) முழு உலகத்தையும் மறுமை வரை பாவங்களால் நிரப்பிவிடும். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஷஃபாஅத் (பரிந்துரை) எப்படிப்பட்ட தென்றால், அது மறுமை வரை பாவங்களை வெறுக்குமாறு உலகத்தை எச்சரித்துக் கொண்டிருக்கிறது. பாருங்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஷஃபாஅத் (பரிந்துரை)யின் மீது நம்பிக்கை வைத்து சும்மா இருக்கக் கூடாது. நீங்கள் இறைவனுக்கு முன்னால் சிரம் பணியவில்லை என்றால், உங்களுடைய முயற்சியினாலும். உழைப்பினாலும் இறைவனுடைய நெருக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யவில்லை என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களுக்கு எந்த வகையிலும் பரிகாரம் செய்ய மாட்டார்கள். ஏனெனில் இறைவனுடைய கட்டளைகளுக்கு பதில் கொடுக்காதவருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பரிந்துரை செய்யவே மாட்டார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னோரிடத்தில் கூறுகிறார்கள்:**

“பரிந்துரை, நற்செயல்களை எப்படித் தூண்டுகிறது? இந்த கேள்விக்கான பதிலும் திருக்குர்ஆனிலிருந்தே தெரிகிறது. அது (பரிந்துரை) கிறித்தவர்கள் நம்புவது போல பாவ விமோசனத்தை தன்னிடத்தில் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அதில் மட்டும் நம்பிக்கை வைத்து விட்டு சும்மா இருக்கக் கூறவில்லை. அதனால் சோம்பேறித் தனம் உருவாகிறது. மாறாக அது கூறுவதாவது, ஃபஇஸா சஅலக இபாதீ அன்னீ ஃபஇன்னீ கரீப். அதாவது என் அடியார்கள் என்னைப் பற்றி, அவன் எங்கே இருக்கிறான் என உம்மிடம் கேட்டால், நான் அருகில் இருக்கிறேன் என நீர் கூறுவீராக. அருகில் இருப்பவரால் எதுவும் செய்ய முடியும். தூரத்தில் இருப்பவரால் என்ன செய்ய முடியும்? தீப் பிடித்து விட்டால், தூரத்தில் இருப்பவருக்கு செய்தி கிடைப்பதற்குள் அது எரிந்து சாம்பலாகியும் விடலாம்.”

“அல்லாஹ்வின் ஆற்றல் மீதும், வல்லமை மீதும் முழுமையான ஈமான் உருவாக வேண்டும். அவன் எப்பொழுதும் அருகில் இருப்பதாக உறுதி கொள்ள வேண்டும். அவன் எல்லா துஆக்களையும் கேட்கிறான் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். **பல துஆக்கள் ரத்தாகி விடுவதில் உள்ள இரகசியம் என்ன வென்றால், துஆ செய்பவர் தனது ஈமானின் பலவீனத்தால் துஆவை ரத்து செய்ய வைத்து விடுகிறார்.**”

துஆ செய்கிறார். ஆனால் கேட்பவன் ஒருவன் கேட்கிறான் என்ற முழு நம்பிக்கை இல்லை. ஒரு பிச்சைக்காரர் ஒரு வீட்டிற்கு முன்னால் குரல் கொடுக்கிறார். ஆனால் வீட்டிற்குள் யாராவது இருக்கவும் செய்கிறாரா இல்லையா என்ற உறுதி இல்லை என்றால் மேலோட்டமாக கதவை இரண்டு தட்டு தட்டி விட்டு அடுத்து சென்று விடுவார். ஆனால் உள்ளே ஒருவர் இருக்கலாம். அவருக்கு குரல் கேட்டு பிறகு அவர் வந்து கதவைத் திறக்கவும் செய்யலாம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் நடந்த ஒரு சம்பவம் அறிவிப்புகளில் வருகிறது. ஒரு பிச்சைகாரர் குரல் கொடுத்தார். அந்தக் குரல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வரை எட்ட வில்லை அல்லது வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஞாபகம் வந்தது. அதற்குள் அந்த பிச்சைக்காரர் சென்று விட்டார். என் குரலுக்கு எந்த பதிலும் வரவில்லையே என அவர் நினைத்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்தப் பிச்சைக்காரருக்குப் பின்னால் ஆட்களை அனுப்பினார்கள். போங்கள், போய் அவரை அழைத்து வாருங்கள். அவர் வந்து, அவருடைய தேவையை நிறைவற்றாத வரை எனக்கு நிம்மதி கிடைக்காது எனக் கூறினார்கள். **அல்லாஹ்வுடைய அடியார்களின் நிலை இப்படி என்றால் அல்லாஹ்வின் நிலை எப்படி இருக்கும் எனப் பாருங்கள்.** எனவே துஆவை கேட்பவன் ஒருவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையுடன் நீங்கள் கதவைத் தட்டுங்கள். தற்காலிகமாக அவன் தாமதப் படுத்தினாலும் அவன் உங்களுக்குப் பின்னால் ஓடோடி வருவான். உங்களைப் பிடித்து தன் வாசலுக்கு திரும்ப அழைத்துச் செல்வான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“ஏராளமான துஆக்கள் ரத்துசெய்யப் படுவதன் ஓர் இரகசியம், துஆ செய்பவர் தமது ஈமானின் பலவீனத்தால் துஆவை ரத்து செய்ய வைத்து விடுகிறார். எனவே, துஆவை கபூல் ஆவதற்கு தகுதி பெற்றதாக ஆக்க வேண்டும். ஏனெனில் அந்த துஆ இறைவனுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இல்லை என்றால், **பிறகு அந்த துஆவை எல்லா நபிமார்களும் சேர்ந்து செய்தாலும் அது கபூல் ஆகாது.** எந்த பலனும் விளைவும் அதற்கு ஏற்படாது. அல்லாஹ் தனது அடியார்களின் துஆக்களைக் கேட்கிறான் என்பது உண்மையான, உறுதியான விஷயமாகும்.”

இங்கு அனுபவசாலி என்ற முறையில் அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் துஆ கபூலாவதன் காட்சிகளைக் கண்டிருக்கிறார்கள்.

“அவன் துஆக்களை ஒப்புக் கொள்கிறான். ஆனால் எல்லா துஆக்களையும் அல்ல. ஏனெனில் மனிதன் மனதின் உந்துதலின் காரணமாக துஆவின் முடிவை பார்ப்பதில்லை. ஆனால் இறைவன் தீங்குகளையும், தீய விளைவுகளையும் கவனத்தில் வைத்து, துஆவை ஒப்புக் கொள்கிறான். அதாவது அவற்றை மறுத்து விடுகிறான். இவ்வாறு துஆவை மறுப்பதே துஆ கபூலாவதாகி விடுகிறது.”

சில துஆக்களை இறைவன் ஒப்புக் கொள்கிறான் என்பதன் பொருள், அதனை மறுப்பது என்பதாகும். இது மிக நுட்பமான கருத்தாகும். தாய் குழந்தையின் குரலைக் கேட்கிறார் இல்லையா? நான் தீயில் கைவைப்பேன் என குழந்தை அடம் பிடிக்கிறது. அதை தாய் ஒப்புக்கொள்வார். ஆனால் அதை மறுப்பதன் மூலம் ஒப்புக் கொள்வார். குழந்தையே! உனக்கு இன்பம் தானே வேண்டும். தீயில் கைபோடாதிருப்பதால் தான் உனக்கு இன்பம் என்பதை நான் அறிவேன் எனத் தாய் கூறுவார். ஆக, குழந்தை அழுது புலம்பிக் கொண்டிருந்தாலும் அதனுடைய துஆவை (வேண்டுதலை) மறுப்பதில்தான் கபூலிய்யத்தின் இரகசியம் இருக்கிறது!

வெளிப்படையில் முரண்பட்டதாகத் தெரியும் இரண்டு விஷயங்களை ஒன்றாகக் கூறி அதன் ஞானத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) விளக்குகிறார்கள். அவர்களைத் தவிர வேறு எவருடைய எழுத்துகளிலும் இந்த மாதிரியான ஞானத்தை உங்களால் காண முடியாது. அவர்கள் கூறுகிறார்கள்:

“ஆபத்துகள், கஷ்டங்களிலிருந்து மனிதன் பாதுகாப்பாக இருக்கும் துஆக்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான்; ஆனால் தீங்கு தரும் துஆக்களை மறுத்து விடுவதன் மூலம் ஒப்புக் கொண்டு விடுகிறான்.”

இதுவும் மிக அருமையான வாக்கியமாகும். தீங்கு தரும் துஆக்களை மறுத்து விடுகிறான் எனக் கூறவில்லை. மறுத்து விடுவதன் மூலம் ஒப்புக் கொண்டு விடுகிறான் எனக் கூறுகிறார்கள்.

**ஹஸ்ரத் வாக்காளிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“**துஆவைப்பற்றி போதிக்காத எந்த நபியும் உலகத்தில் வரவில்லலை.** இந்த துஆ உபூதிய்யத் (இறைவனுக்கு அடிமையாக இருக்கும் பண்பு)திலும் ருபூபிய்யத் (இறைவனுடைய படைத்து காத்தோம்பும் பண்பு)திலும் ஒரு உறவை ஏற்படுத்தி விடுகிறது.”

“இந்த பாதையில் காலெடுத்து வைப்பதும் கஷ்டமானதாகும். ஆனால் காலெடுத்து வைத்துவிட்டால், துஆ அந்தக் கஷ்டங்களை எளிதாக்கிவிடுகிறது. மனிதன் தொடர்ந்து இறைவனிடம் துஆக்களைக் கேட்டுக் கொண்டிருந்தால் அவன் வேறு வகை மனிதனாகவே மாறி விடுகிறான்.”

இந்த விஷயமும் அனுபவத்தில் வர வேண்டும். இறைவனை அடைந்தவர்களுக்கு இந்த அனுபவம் கிடைக்கிறது. துஆ வேண்டினால் வேண்டிக் கொண்டே செல்லுங்கள். என்னுடைய வேலை துஆ செய்வதுதான். அதை ஒப்புக் கொள்வதும் ஒப்புக் கொள்ளாமல் இருப்பதும் இறைவனுடைய விருப்பமாகும். எனது வாழ்வின் தொடர்பு நிலை பெற்றிருப்பதற்காக, எல்லா நிலையிலும் நான் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் துஆ செய்ய வேண்டும்.

“அவருடைய ஆன்மீக பலவீனங்கள் விலகி அவருக்கு ஒரு விதமான அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கிறது. அவர் எல்லா விதமான காழ்ப்புணர்ச்சியிலிருந்தும், காட்டுவதிலிருந்தும் விலகி இறைவழியில் உருவாகும் எல்லா கஷ்டங்களையும் தாங்கிக் கொள்கிறார். **மற்றவர்கள் தாங்கிக் கொள்ளாத அல்லது தாங்கிக் கொள்ள முடியாத கஷ்டங்களையும், இறைவன் தன்மீது திருப்தி கொள்ளட்டும்**

**என்பதற்காக அவர் தாங்கிக் கொள்கிறார்.** அப்போது, ரஹ்மானும், ரஹீமுமாகிய இறைவன் அவர் மீது கவனம் செலுத்துகிறான். அவருடைய எல்லா கஷ்டங்களையும் துன்பங்களையும் மகிழ்ச்சியாக மாற்றி விடுகின்றான்."

உழைப்பதற்கு இனி எத்தனை நாட்கள் உங்களுக்கு எஞ்சியுள்ளன? மிக குறைந்த நாட்கள் தான் எஞ்சியுள்ளன. இந்த நாட்களில் எவ்வளவு உழைக்க முடியுமோ உழையுங்கள். **எந்த உழைப்பை முழுமை செய்ய முடியவில்லையோ, அதை வருடம் முழுக்க செய்து முடிக்க வேண்டும். இதைத்தான் 'ஜுமுஅத்துல் விதா'வின் கடைசி தூதுச் செய்தியாக நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.** எஞ்சிய இந்த நாட்களுக்குப் பிறகு, இனி உழைப்பதற்கு ஒருவருடம் வரை காத்திருக்க வேண்டும் என நினைக்காதீர்கள். தொடர்ந்து உழைக்க வேண்டும்; வருடம் முழுக்க முயற்சி செய்ய வேண்டும். அப்போது அல்லாஹ் அடுத்த வருடம் உங்களுக்கு லைலத்துல் கத்ரைக் காட்டலாம். அது சுரங்கப்பாதைக்குப் பிறகு முடிவுராத ஓர் ஒளியை உங்களுக்குத் தரலாம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

"உண்மையான தூய்மையும், நல்ல முடிவையும் பெற்றுக் கொள்வதற்கு இறைவன் நமக்கு கற்றுத் தந்த இரண்டாவது வழி முறை துஆவாகும். எனவே முடிந்த அளவுக்கு துஆ செய்யுங்கள். இந்த வழிமுறை உயர்தரமானதும் பலனுள்ளதும், விளைவைத் தருகிறதுமாகும். ஏனெனில், உத்வூனீ அஸ்தஜிப் லகும் என அல்லாஹ் வாக்களித்துள்ளான். அதாவது துஆ கேளுங்கள். நான் உங்களுக்காக ஏற்றுக் கொள்வேன். **துஆ எத்தகையது என்றால், முஸ்லிம்கள் இதனால் பிற சமுதாயங்களை விட பெருமைப்பட வேண்டும். மற்ற மார்க்கங்களுக்கு துஆவின் உண்மை நிலை பற்றி எதுவும் தெரியாது.** இதனால் அவர்களிடத்தில் துஆவுக்கு எந்த மதிப்புமில்லை."

அன்றாட வாழ்வில் அவர்களுக்கு துஆ வோடு எந்த சம்பந்தமும் இல்லை. கிறித்தவர்கள் அல்லது புத்த மதத்தினர்கள் சந்திக்கும் போது ஒருவர் இன்னொருவரிடம் துஆ செய்யுங்கள் எனக் கூற நீங்கள் எங்கேயாவது கேட்டிருக்கிறீர்களா? **துஆ செய்வதும், செய்யச் சொல்வதுமான இந்த பழக்கம் முஸ்லிம்களிடம் கூட இல்லை. அஹ்மதிகளிடமே இருக்கிறது.** வரும் போதும், போகும் போதும் துஆ செய்யக் கூறுகிறார்கள்.கடிதம் எழுதும் போதும் துஆ செய்யுமாறு எழுதுவார்கள். அஹ்மதிகளின் ஒரு மாத கடிதங்களில் துஆவுக்காக எத்தனை பேர் எழுதுகிறார்களோ அந்த அளவுக்கு முழு உலகத்திலும் ஒரு மாத காலத்தில் எழுதப் படுகின்ற இலட்சக்கணக்கான கடிதங்களில் கூட துஆ பற்றிய குறிப்பைக் காண முடியாது. ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்ன அருமையான கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள்:

"மற்ற மார்க்கங்களுக்கு துஆவின் உண்மை நிலை பற்றி எதுவும் தெரியாது. இதனால் அவர்களிடத்தில் துஆவுக்கு எந்த மதிப்புமில்லை. இன்னும் சொல்லப்போனால், முஸ்லிம்கள் கூட இதில் தடுமாற்றம் அடைந்துள்ளார்கள். துஆ போன்ற ஒன்றை கை விட்டு விட்டார்கள். ஆனால் இந்தப் பெருமையும், கவுரவமும் இஸ்லாத்திற்கு மட்டுமே உள்ளது. மற்ற மார்க்கங்கள் இதனை முற்றிலும் அறியாதவர்களாக இருக்கின்றன."

எனவே, எனது குத்பாவைக் கேட்டுக் கொண்டிருக்கின்ற முழு உலகத்திலுமுள்ள அஹ்மதிகளே! கடைசி தூது என்னவென்றால், நீங்கள் இந்த பெருமையை உங்கள் தலையிலிருந்து இறக்கிவிட வேண்டாம். வாழ்நாள் முழுவதும் இதுவே உங்களுடைய கிரீடமாக இருக்கட்டும். இதுவே இறை திருப்தி என்ற கீரிடமாகும். அஹ்மதிய்யா ஜமாஆத்தின் தலைகளில் இந்த கிரீடம் மிளிர்ந்து கொண்டிருக்கட்டும். இறைவன் அவ்வாறே செய்வானாக. *(ஜுமுஆ பேருரை : 15.01.1999)*

**தமிழில்:**

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A**

சென்ற இதழ் தொடர்ச்சி.....

# வாழ்க்கையை அர்ப்பணிப்பதன் அவசியமும் அதன் அருள்களும்

## முஅல்லிம் M. ஷாஜஹான்

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

உலகத்தை ஒதுக்கி மார்க்கத்திற்கு தன்னை அர்ப்பணிக்கும் ஒவ்வொரு நபரும், தன் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி தந்து மார்க்கத்திற்கு அர்ப்பணிக்கும் எல்லா தந்தையும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் குடும்பத்தை சார்ந்தவர்களாவர். அவர்களினால் இஸ்லாம் உயிருடன் இருக்கிறது." மேலும் அவர்கள் கூறுகிறார்கள்:

"கட்டாய சந்தா கொடுப்பது எவ்வாறு ஒவ்வோர் அஹ்மதிக்கும் அவசியமோ அதே போன்று தன்னுடைய ஏதேனும் ஒரு மகனை மார்க்கத்திற்காக அர்ப்பணிப்பது அவசிய மாகும்.

மற்றோர் இடத்தில் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

"உலகில் செல்வத்தை கொண்டு ஒருபோதும் தப்லீக் நடைபெறவில்லை. மேலும் செல்வத்தை கொண்டு முழு உலகிலும் தமது தப்லீகை செய்துவிடமுடியும் என எந்த சமூகம் நினைக்குமோ அவர்களைவிட அதிகம் ஏமாற்றம் அடைபவர்கள், அவர்களைவிட அதிகம் அறிவீனர்கள், அவர்களைவிட அதிகம் பைத்தியக்காரர்களை கொண்ட சமூகம் உலகில் வேறு இருக்க முடியாது.

மேலும் அவர்கள் கூறுகிறார்கள்:

"நாம் சரியான அறிவை அவர்கள் உலகிற்கு எடுத்துக் கூற வேண்டியதுள்ளது. மேலும் இதற்காக ஆயிரக்கணக்கான உலமா தேவைப்படுகிறார்கள்."

24.03.1944 அன்று வாழ்க்கை அர்ப்பணிப்பு தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்:

"உடல் ரீதியான வேலையை ஒரு நபரிடமிருந்து கூட வாங்கிக்கொள்ளலாம். ஏனென்றால் உடலை வெல்வது சுலபமானது. ஆனால் ஆன்மீக வேலைக்கு அதிகமான நபர்கள் தேவைப்படுவார்கள். ஏனென்றால் உள்ளத்தை வெல்வது மிகவும் கடினமாகும். அதற்காக அதிகமான முஅல்லிம்களின் தேவையுள்ளது. நாம் அவர்களை எல்லா ஜமாஅத்துகளிலும் அனுப்பி விடுவோம்."

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபதுல் மஸீஹ் அவர்கள் அர்ப்பணிப்பில் பங்கு பெறாதவர் தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்:

"ஈமானின் மிகக்குறைந்த அடையாளம் ஒவ்வொரு குடும்பமும் ஒரு மகனையாவது அர்ப்பணிக்க வேண்டும். எவர் இவ்வாறு அர்ப்பணிப்பதில்லையோ அவர்கள் வெட்கத்தால் நாவால் சொல்வதில்லை. என்றாலும் செயல்ரீதியாக கூறுவது, மூஸாவே! நீயும் உனது இறைவனும் சென்று எதிரிகளுடன் போர் செய்யுங்கள். நாங்கள் இங்கேயே அமர்ந்திருப்போம் என்பதைத்தான். அவர்கள் இவ்வாறு நாவால் சொல்லவில்லை என்றாலும் தமது செயலால் இதைத்தான் கூறுகின்றனர். மேலும் அவர்களின் உள்ளத்தில் இதுவே இருக்கிறது. மேலும் எவரின் உள்ளத்தில் இவ்விஷயம் உள்ளதோ அவர் நம்பிக்கையாளராக முடியாது."

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அர்ப்பணிப்பின் தேவை குறித்து இவ்வாறு கூறுகிறார்கள்:

"அர்ப்பணிப்பின் ஆன்மா மற்றும் வாழ்வை, ஜமாஅத்தில் நிலைபெறச் செய்ய ஜமாஅத் உறுப்பினர்கள் அதிக எண்ணிகையில் தங்களை மார்க்கத்திற்கு தொண்டு செய்ய அர்ப்பணிக்கவேண்டும்."

மற்றோர் இடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்: "சில புதிய இடங்களில் கொள்கை பரப்பு நிலையங்களை உருவாக்க வேண்டிய

தேவையுள்ளது. சில நாடுகளில் பள்ளிவாயில்கள் கட்ட வேண்டிய தேவையுள்ளது. ஆனால் அதற்காக முதலில் தேவைப்படுவது முபல்லிகீன் மற்றும் முபஷ்ஷிரீன்கள் (முஅல்லீமின்) ஆவர். அஹ்மதி பிள்ளைகளும், இளைஞர்களும் இதற்காக முன் வரவேண்டும். மேலும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அர்ப்பணிக்க வேண்டும். *(அல் ஃபஸ்ல் 24 பிப்ரவரி 1966)*

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கிலாஃபத் காலம் வெற்றியின் காலமாக இருந்தது. எனவே, முபல்லிக்களின் தேவை அதிகமாக இருந்தது.

அவர்கள் கூறுகிறார்கள்: "முழு உலக அஹ்மதிகளுக்கும் இந்த அறிவிப்பின் மூலம் கவனமூட்டுகிறேன். இதற்கு முன் நீங்கள் முபல்லிகாக இருக்கவில்லை என்றால் இன்று முதல் நிச்சயமாக முபல்லிக் ஆகவேண்டும்."

இவ்வாறு பல அறிவிப்புகளை செய்து ஆர்வப்படுத்தி தப்லீகின் மேன்மை மற்றும் அவசியத்தை எடுத்துக் கூறி அழைப்பு விடுத்தார்கள். அதன் விளைவாக ஜமாஅத்தின் எல்லா நல்ல ஆன்மாக்களும் ஒரு நல்ல முபல்லிக் ஆக மாறினர். ஆனால் ஜமாஅத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காரணமாக முபல்லிக்குகளின் தேவை அதிகமாக இருந்தது. அதேபோல் வருங்கால தேவை இதைவிட அதிகமாக இருக்கும் என்பதை அறிந்த காலத்தின் கலீஃபா அவர்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள இஸ்மாயீல் (அலை) அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் மர்யம் (அலை) அவர்களின் அர்ப்பணிப்பின் மறுதோற்றமாக வக்ஃபே நவ் எனும் திட்டத்தை ஜமாஅத்தின் முன் வைத்தார்கள்.

ஜமாஅத்தின் தூய உறுப்பினர்கள் இந்த திட்டத்தில் தங்கள் பிள்ளைகளை அர்ப்பணித்து, தயார்படுத்தி ஜமாஅத்திடம் ஒப்படைத்து வருகின்றனர்.

இந்த அர்ப்பணிப்பின் அவசியம் மிக தேவையாக இருக்கிறது. வருகிற நூறு வருடங்களில் இஸ்லாம் எல்லா இடங்களிலும் அதிகமாக பரவி விடும். அப்போது லட்சக்கணக்கான பயிற்சி பெற்ற அர்ப்பணிப்பாளர்கள் தேவைப்படுவார்கள். அவர்கள் அல்லாஹ் மற்றும் முஹம்மது (ஸல்) அவர்களின் அடிமைகளாக இருப்பர். இதற்கு அர்ப்பணிப்பவர்கள் அதிகம் தேவைப்படுவர்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபதுல் மஸீஹ் அவர்கள் இத்திட்டத்தை இரண்டு வருடங்களுக்கு என அறிவித்தார்கள். பிறகு இன்னொரு இரண்டு வருடம் என நீட்டி கொடுத்தார்கள். பிறகு ஜமாஅத்தின் வளர்ச்சியை கண்டு ஐந்தாயிரம் அர்ப்பணிப்பாளர்கள் தேவை என்றார்கள். ஆனால் இறைவனுடைய அருளால் 28ஆயிரம் பேரைவிட அதிகமாக ஜமாஅத்தில் அர்ப்பணித்துள்ளனர். மேலும் இத்திட்டம் நிரந்தர திட்டமாக மாறி அதன் எண்ணிகையும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அவர்களில் பலர் இன்று பல்வேறு நாடுகளில் உள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கற்றும் பயின்றும் வருகின்றனர் அல்ஹம்துலில்லாஹ்.

**அர்ப்பணிப்பின் அருள்கள்**

ஹதீஸ்குத்ஸில் வருகிறது. அல்லாஹ் கூறுகிறான். "அடியான் ஓர் அடி என் அருகில் வரும்போது நான் ஒரு முழம் அவன் அருகில் செல்கிறேன். அவன் ஒரு முழம் என் அருகில் வரும்போது, நான் இரண்டு முழம் அவன் அருகில் செல்கிறேன். மேலும் அவன் என் பக்கம் நடந்து வருகையில் நான் அவன் பக்கம் ஓடிச் செல்கிறேன்." *(முஸ்லிம்)*

ஓர் அடியார் தனது அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைக்கும்போது முழு உலகங்களின் இறைவன் அவர் மீது தன்னுடைய எல்லா பரக்கத்துகள் மற்றும் ஃபஸ்ல் மற்றும் ரஹ்மத்துகளை இறக்க தொடங்குகிறான். இதைத்தான் இறைவன் தனது இல்ஹாமின் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இவ்வாறு கூறுகிறான்: "ஜெ தூ மேரா ஹோரஹெ சப் ஜக் தேரா ஹோ." நீர் எனக்குரியவராக ஆகின்றீர்; முழு உலகும் உமக்குரியதாக ஆகி விடுகின்றது.

எனவே, அர்ப்பணிப்பவருக்கு முழு உலகம் தரப்பட்டு விடுகிறது. அர்ப்பணிப்பு இறை

நேசத்தை பெற்று தருகிறது. இதேபோல் நிம்மதியும் நிரந்தர இன்பமும் கிடைக்க வழியாக அமைகிறது. தூய வாழ்வுக்குரிய வழியாக அமைகிறது. கவலை மற்றும் பயத்தை அகற்ற காரணியாக அமைகிறது. நீண்ட ஆயுள் பெறவும், நல்ல மரணத்தை பெறவும் காரணியாக அமைகிறது. ரிஸ்கில் பரக்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆ கிடைக்கிறது. இது தவிர எண்ணற்ற பரக்கத்துகள் அர்ப்பணிப்பல் உள்ளது. அவை ஒரு போதும் முற்று பெறுவதில்லை. மேலும் மிகப்பெரிய பரக்கத் எதுவென்றால் ஓர் உண்மையான அர்ப்பணிப்பாளருக்கு அவருடைய இறைவன் கிடைத்துவிடுகிறான். எவருக்கு அவரின் இறைவன் கிடைத்து விடுகிறானோ அவருக்கு வேறு என்ன வேண்டும்? அவரின் அனைத்து நோக்கமும் நிறைவேறி இவ்வுலகிலேயே சுவர்க்கத்தை பெற்று நிலையான வாழ்வை பெற்று விடுகிறார்.

இறுதியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள் ஒன்றைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

“என் ஜமாஅத்திற்கு வஸிய்யத் செய்கிறேன் மேலும் இவ்விஷயத்தை தெரியப்படுத்தி விடுகிறேன். இதை அவர் கேட்பதும், கேட்காமலிருப்பதும், இனி அவரைப் பொருத்தது. எவரேனும் ஈடேற்றத்தை பெற விரும்பினால் மேலும் தூய்மையான வாழ்க்கை அல்லது நிரந்தர வாழ்வு பெற விரும்பினால் அவர் அல்லாஹ்வுக்காக தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும். மேலும் ஒவ்வொருவரும் இந்த உயரிய அந்தஸ்த்தை பெற முயற்சிக்கும் கவலையில் ஈடுபட்டு என் வாழ்வும், என் மரணமும், என் தியாகமும், என் வணக்கமும் அல்லாஹ்வுக்கே உரியது எனக் கூற வேண்டும். மேலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் போன்று அவரின் ஆன்மா அஸ்லம்து லிரப்பில் ஆலமீன் என எழுந்து கூறவேண்டும். மனிதன் இறைவனிடம் மாய்ந்து விடாத வரை, இறைவனிடம் மரணிக்காதவரை புது வாழ்வை பெற முடியாது.

எனவே, நீங்கள் என்னுடன் தொடர்புடையவர்களாகியுள்ளீர்கள். இறைவனுக்காக வாழ்வை அர்ப்பணிப்பதில் என்னுடைய வாழ்க்கையின் உண்மையான நோக்கம் இருப்பதாக நான் கருதுவதை நீங்கள் பார்க்கிறீர்கள். பிறகு என்னுடைய இந்த செயலை தனக்காக விரும்புவர் உங்களில் எத்தனைபேர் இருக்கின்றீர்கள்? மேலும் இறைவனுக்காக வாழ்வை அர்ப்பணிக்க விரும்புவர் உங்களில் எத்தனைபேர் இருக்கின்றீர்கள் என நீங்கள் உங்களுக்குள், பாருங்கள்.” *(அல்ஹக்கம் 81 ஆகஸ்ட் 1900)*

---

**2-ம் பக்க தொடர்ச்சி...**

நிபந்தனைகளை வைத்துள்ளான். என் கருத்துப்படி, உண்மை நிலை என்னவென்றால், மனிதன் உண்மையுடனும், தூய உள்ளத்துடனும் படைத்தவனிடம், **நீ என்னை இந்த மாதத்தில் இழப்பிற்குரியவனாக ஆக்கிவிடாதே என வேண்டினால் இறைவன் அவரை இழப்பிற்குரியவனாக்கமாட்டான். அப்படிப்பட்ட நிலையில் மனிதன் ரமலான் மாதத்தில் நோயுற்றால், அந்த நோய் அவருடைய ஹக்கில் அருளாக இருக்கும். ஏனெனில் ஒவ்வொரு செயலின் அடிப்படை நிய்யத்தில்தான் இருக்கிறது.** நம்பிக்கை கொண்டவர் தன்னை இறைவழியில் தைரியசாலியாக நிரூபித்துக் காட்ட வேண்டும். நோன்பிலிருந்து இழப்பிற்குரியவராக இருப்பவருடைய உள்ளத்தில், அந்தோ! நான் உடல்நலமுள்ளவனாக இருந்தால் நோன்பு வைத்திருப்பேன் என்ற ஏக்கம் இருக்குமென்றால் - அதற்காக அவருடைய உள்ளம் துடிக்குமென்றால் **மலக்குகள் அவருக்காக நோன்பு வைப்பார்கள்.** ஆனால் அவர் சாக்குப்போக்குகளைத் தேடாதவராக இருக்க வேண்டும். அப்போது அல்லாஹ் ஒருபோதும் நற்கூலியிலிருந்து விலக்கி வைக்கமாட்டான்.” ***(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 259)***

# NABI VAZHI Tamil Monthly July 2011

**Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211**


## தஹ்ரீகே ஜதீதுக்கும் ரமலானுக்கும் இடையிலான 4 ஒப்புமைகள்

தஹ்ரீகே ஜதீது திட்டத்தை தோற்றுவித்த இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீது சந்தா திட்டத்திற்கும், புனித ரமலானுக்கும் இடையில் எளிய வாழ்க்கை, கடின உழைப்பு, உறுதியாக நிலைத்திருத்தல், துஆ ஆகிய 4 விஷயங்களில் முக்கியமான ஒப்புமைகள் இருப்பதை விளக்கிக் கூறிய பிறகு இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

''இந்த நான்கு மாபெரும் ஒப்புமைகள் ரமலானுக்கு தஹ்ரீகே ஜதீது திட்டத்துடன் இருக்கின்றன. அவ்வாறே இந்த நான்கு ஒப்புமைகள் தஹ்ரீகே ஜதீது திட்டத்திற்கு ரலானுடன் இருக்கின்றன; எனவே நீங்கள் ரமலானிலிருந்து பயன் பெற விரும்புகிறீர்கள் என்றால், தஹ்ரீகே ஜதீது திட்டத்தின்படி செயல்படுங்கள்; தஹ்ரீகே ஜதீது திட்டத்திற்கு பயனளிக்க விரும்புகிறீர்கள் என்றால், நோன்புகளின் மூலமாக சரியான முறையில் பயன் பெறுங்கள்.

எனவே ரமலானிலிருந்து பயன் பெறுங்கள் என்று நான் கூறினேன் என்றால் உண்மையில் நீங்கள் தஹ்ரீகே ஜதீதின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் ரமலானின் ஒளியில் புரிந்து கொள்ளுங்கள் என நான் உங்களுக்குப் புரிய வைத்திருக்கிறேன். மேலும் தஹ்ரீகே ஜதீதின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என நான் கூறினேன் என்றால் வேறு சொற்களில் நான் உங்களுக்கு, எல்லா நிலையிலும் ரமலானின் நிலையை உங்களிடத்தில் உருவாக்கிக் கொள்ளுங்கள் எனக் கூறியிருக்கிறேன் என்பதாகும்........ எந்த ரமலான் உண்மையான தியாகம் இல்லாமல் சென்று விடுகின்றதோ அது ரமலான் அல்ல; எந்த தஹ்ரீகே ஜதீது ஆன்மாவுக்கு புத்துயிர் அளிக்காமல் சென்று விடுகிறதோ அது தஹ்ரீகே ஜதீது அல்ல.'' (குத்பா 4.11.1938)

**(தஹ்ரீகே ஜதீது ஏக் இலாஹி தஹ்ரீக் தொகுதி 1, பக்கம் 582)**


பார்க்கத் தவறாதீர்கள்!

# தமிழன் தொலைக்காட்சியில்

ரமலானில் சஹர் நேரத்தில் தினமும் அதிகாலை 3.30 மணி முதல் 4.00 மணி வரை ஒளிபரப்பாகும்

## ஆன்மீக வசந்த காலம்

என்ற நிகழ்ச்சியையும்

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை ஒளிபரப்பாகும்

## மாநபி (ஸல்) அவர்கள் தந்த உண்மை இஸ்லாம்

என்ற எமது நிகழ்ச்சியையும் காணத் தவறாதீர்கள். திருக்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் இஸ்லாத்தின் உண்மை நிலையை விளக்கும் ஓர் அரிய நிகழ்ச்சி

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்

11, முதல் பிரதான சாலை, யு. ஐ. காலனி, கோடம்பாக்கம், சென்னை-600024



If undelivered please return to:

முகவரி : நிர்வாகி - **நபி வழி**

**அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**

11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம்,சென்னை-24. Ph : 24817174

Printed & Published By : **K. NASIR AHMED**
From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174.
Editor : **O.M. MUZZAMMIL AHMAD**
Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.